ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

1704
2-55



REGISTRAR OF BOOKS
1956
MADRAS

மன்னார்குடியில் ஸ்ரீராஜகோபாலன் மங்களாசாஸனம்

JL
N55.14.6
199558

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் — 150
2. செய்திகள் — 152
3. திவ்யஸூக்திரஸாஸ்வாதம் — 153
[ஸ்ரீ. உப. N. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, அட்வோகேட், மதுரை.]
4. ஹிந்து தர்மமும் மதமும் — 155
[ஸ்ரீ. உப. வித்வான், சி. மா. வேங்கடராகவாசார்ய ஸ்வாமி, சிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம் ஏஜண்டு & ஸ்ரீகார்யம், ஹைதராபாத்.]
5. திருப்பாவைக்கதை — 157
[ஸ்ரீ.உப. திருவரங்கம், திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M.O.L., திருப்பதி.]
6. பட்டாபிஷேக ஸ்ரீமுகம் — 161
[ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, தலைமை ஆசிரியர்; ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.]
7. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் — 165
8. "அம்புயத்தாளை யணைந்த ஆயிரந்தோளாளரி" — 167
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
9. "தீர்ப்பாரை" — 170
[ஸ்ரீ.உப. ஒரகடம், கோ. ஸுதர்சனசார்ய ஸ்வாமி, ரிடையர்டு தமிழாசிரியர், அவளூர்.]
10. விரோதபரிஹாரம் — 173
[ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, வ்யாகரண ஸாஹித்ய வேதாந்தசிரோமணி, காஞ்சீபுரம்.]
11. பஞ்சாங்கஸங்க்ரஹம் — 177
12. அர்ச்சனையும் அதன்மொழியும் — 178
[மேலநரிக்குடி கிராமவாஸி.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } மன்மத ஞூ ஆனி மீ { ஸஞ்சிகை 6

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஒரு நாட்டை ஆளும் முறைகளுள் ஜன நாயகமும் ஒன்று. அதாவது:— ஜனங்கள் தங்களுடைய நலனைக் கருதி தங்களுடைய ஆட்சி முறையை தாங்களாகவேவகுத்துக்கொண்டுஆட்சிபுறிவதுதான். இம்மாதிரியான ஆட்சிமுறைகளில் ஜனங்கள் எல்லோரும் ஸௌக்யமாய் இருத்தல் வேண்டும் என்றும்; இருக்கக்கூடும் என்றும் அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். நாட்டு மக்கள் பெரும்பாலும் படித்தறிந்தவர்களாகவும், படிப்புக்குத்தக்க நன்னடத்தை உடையவர்களாகவும் இருந்தால்தான் இவ்வித ஆட்சிமுறை வெற்றியடையும். இல்லாவிடில் நாட்டில் பலருக்கு துன்பம் ஏற்படுவதுடன் நாட்டின் முன்னேற்றமும் தடைபடும். அநுபவமும், பொது நல நோக்கமும் இல்லாதவரிடையே நாட்டின் ஆட்சிப் பொறுப்பு எக்காரணத்திலாவது ஏற்பட்டால் நாட்டின் இடுக்கண்கள் தோன்றுவது இயல்பே.

ஜன நாயகமும் வைதிக மதமும்

உலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் சுய நலமும், மற்றவர்களுடைய நலமும் மனத்திற் தோன்றுவது ஸஹஜமே. சுய நலத்தை அடக்கி, மற்றவர்களுடைய நலத்தையே முக்கியமாகக் கருதி பாடுபடுபவர்கள் உத்தம புருஷர்கள். பிறருடைய நலனுக்கு விரோதமில்லாமல் தன் நலனையும் கருதுபவர்களும் நாட்டின் நன்மையை உத்தேசிப்பவர்களேயாகும். தன் நலனையே முக்கியமாகக் கருதுபவர்கள் அதமர்கள். இம்மாதிரியான பாகுபாடுகளில் நம் நாட்டு புராதான வைதிகமதத்தைப்பின் பற்றுபவர்கள் உண்மையாக சுய நலமற்றவர்களாகவே இருந்து வரவேண்டியதென்பது தான் நம்முன்னோர்கள் வகுத்தவழி. நாளடைவில் இவ்வழியில் சில குறைவுபாடுகள் ஏற்பட்டன என்பது உண்மையே. ஆயினும் வைதிகமதத்தை பின்பற்றுபவர் எல்லோரும் அப்படி என்று கூறவியலாது. தவிரவும் வைதிக கர்மாக்கள் யாவையும் ஸமூஹ நலனுக்கே அன்றி ஒருவருடைய சுயநலனுக்காகவல்ல. ஒரு வைதிகர் ப்ரதிதினமும் செய்யும் ஔபாஸன அக்னிஹோத்ரங்களும் ஸமூஹ நலனுக்கே என்பதும் முன்னோர்களின் கருத்து.

'अग्नौ प्रास्ताहुतिः सम्यगादित्यमुपतिष्ठते ।
आदित्याज्जायते वृष्टिः वृष्टेरन्नं ततः प्रजाः ॥'

என்பதுதான் நமது கொள்கை. அதாவது அக்னியில் ஸமர்ப்பிவிக்கப்பட்ட ஆஹுதி ஸூர்யனை அடைகிறது, ஸூர்யனிடமிருந்து மழை கிடைக்கிறது. மழையினால் உணவு உற்பத்தி ஏற்படுகிறது. இதனால் ஜனங்கள் ஸுகித்திருக்கிறார்கள் என்பதுதான் நமது கருத்து. ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் கர்மாக்களின் முடிவில் உலகம் ஸௌக்யமாக இருக்கவேண்டுமென்றுதான் நாமும் ப்ரார்த்திக்கிறோம். உண்மை இப்படி இருக்க வைதிகப்பற்றுள்ள நம்போன்றவர்கள் ஜனநாயகத்திற்குப் புறம்பானவர்கள் என்று யார் கூறினாலும் அது பெரிய விந்தையல்லவா! ஜந நாயகத்தில் மதம் இடம் பெறமுடியாதென்று' யார் கூறினாலும் அவர்களுடைய போக்கை நாம் என்ன கூறுவது!

சில காலத்துக்கு முன்பு "எவ்விதமான மதமும் பொதுவுடமைக் கொள்கைக்கு ஒவ்வாதது" என்று பொதுவுடைமைக்கட்சிகள்

தலை தூக்கிய நாட்டில் கூறிவந்தார்கள். ஆனால் நாளடைவில் இக்கருத்து பிழை உள்ளது என்று அநுபவத்தில் அறிந்து கொண்டார்கள் அன்னாட்டு அறிஞர்கள். ஆதலால் முன்பு மதச்சின்னங்களை அழித்த அவர்களே இப்பொழுது மதக்கட்டுப்பாடுகளுக்கு இடமளிக்கிறார்கள். மதக்கொள்கைகளை ஒருவன் பின்பற்றுவதை தடைசெய்யாமல் அவன் வழியே நடக்க அநுமதிக்கிறார்கள் என்றால் மதக்கொள்கைகளுக்கு இது ஒரு பெரிய வெற்றியல்லவா. இப்பொழுது ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள நம்நாட்டு ப்ரதமர் ஓர் விருந்து மாளிகையில் வீற்றிருந்த ஸமயம் அங்கு சுவர்களில் பைபிளில் வர்ணிக்கப்படும் காட்சிகள் சித்திரிக்கப்பட்டிருந்தன என செய்தித்தாள்களின் (இந்தியன் எக்ஸ்பிரஸ் 22—5—55) மூலம் நாம் அறிகிறோம். இவ்விதம் மதக் கோட்பாடுகளை வெறுக்கும் மத சார்பற்றநாடுகளே இருபது, முப்பது வருட அநுபவத்துக்குள் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொண்டு மனிதனுடைய சுய உறிமையான மதக்கொள்கைகளுக்கு இடமளித்து வருகிறதென்றால் இதையாவது கண்கூடாகக் கொண்டு இந் நாட்டு அரசியல் கொள்கைகளின் சாயைகளை அநுஸரிக்கும் எந்நாடும் தன்நாட்டு மக்களின் மதக்கொள்கைகளை வெறுக்காமலும் அவரவர் புராதன பழக்கங்களை அநுஸரிக்க அநுமதியும் கொடுத்து வரவேண்டுமென்று தோன்றவேண்டாமா?

ஒவ்வொரு மனிதனுக்கும் தன் சரீர போஷணையில் எவ்வளவு ஊக்கம் உண்டோ அவ்வளவு ஊக்கமாகிலும் தனது ஆத்மரக்ஷணத்தில் இருக்கவேண்டியது அவசியம். இதன் காரணமாகத்தான் முன்னாள் வந்த நற்கார்யங்களையும் சுய நலமற்றதும், நாட்டு நலனுக்கென்று ஏற்பட்டதுமான வைதிககர்மாக்களை கருத்துடன் செய்துவரவேண்டியது அவசியம். தன் கார்யங்களை சரிவரச் செய்பவன்தான் பிறர் கார்யங்களை செவ்வனே செய்யவும் உதவுவான். தன் கார்யங்களைப் புறக்கணிப்பவன் பிறர் க்ஷேமத்திற்கென்று செய்யவேண்டிய கார்யங்கள் அனைத்தையும் செய்தவன் ஆகமாட்டான். உலக ஸுகத்துக்குப் பாடுபடுபவன் ஆனபோதிலும் ஆத்மீக வளர்ச்சிக்கும், ஸமூஹத்திலுள்ள மற்றவர்களின் பிற்கால ஸுகத்துக்கும் இவன் எதுவும் செய்தவன் ஆகான். மிகவும் கவனத்துடன் நம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தனக்கேற்பட்ட வைதிககர்மாக்களை ச்ரத்தையுடன் செய்துவருவது ஒன்றே தனக்கும் தன் நாட்டுக்கும் செய்யக்கூடிய பெரிய உதவி என்பதை மனத்திற்கொண்டு ஸத்கார்யங்களை நிறுத்தக்கூடாதென்பதை வலியுறுத்துகிறோம்.

* * * * * * *

ஸ்ரீ அஹோபில மடத்தின் கல்வித் திட்டம்

ஸ்ரீ மதழகியசிங்கரின் திவ்யாநுக்ரஹத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி திட்டம் இரண்டு ஆண்டுகளை பூர்த்தி செய்து மூன்றாவது ஆண்டைத் துவக்குகிறது. நமது ஸமூஹச் சிறுவர்களின் பிற்காலத்திய நலனையே முக்கிய நோக்காகக்கொண்டது இத்திட்டம் என்பதை யாவரும் அறிவர். சரீர ஸௌக்யத்திற்கு இடை இடையே விளக்கெண்ணை முதலிய மருந்து ஸாதனங்களை உபயோகிக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தபெரியவர்களும், கவனக்குறைவினால் இதை ஏற்காமல் பின்னர் அல்லல் படுவதைப்போல் நம்மிடம் புகுந்ததுராசாரங்களை இடையிடையேகளைந்துவிட்டு ஸதாசாரங்களைபின்பற்றாமல் நாம் இருந்து வந்தால் நமது ஸமூஹத்திற்கு ஏற்பட்ட துராசாரமாகிய வியாதி நமது ஸமூஹத்தை முற்றிலும் பாழ்படுத்திவிடும். ஆதலால் இனியாவது நமது சிறுவர்களுக்கு நற்பழக்க வழக்கங்களையும், நல்ல ஆசார அநுஷ்டானங்களையும் போதிக்க பெற்றோர்கள் முன்வரவேண்டும். ஆயிரக்கணக்கான ரூபாய்களை ப்ரதிமாதமும் செலவுசெய்து நல்லஅநுபவமும் அறிவும் உள்ள ஆசிரியர்களையும் ஏற்பாடுசெய்து பள்ளிக்கூடங்களை பல விடங்களிலும் ஏற்படுத்தியும், பெற்றோர்கள் பெருவாரியாகப் பிள்ளைகளை அனுப்புவதில்லை என்றால் வைதிகத்தில் எவ்வளவு நம்பிக்கைக்குறைவு ஏற்பட்டுள்ளது

என்பது கண்கூடு. மற்றையபள்ளிக்கூடங்களைக் காட்டிலும் அதிகமான பாடங்களையும், அறிய விஷயங்களையும் நமது பாடசாலையில் பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள் என்பதை விஷயமறிந்த பெற்றோர்களும் உணர்ந்து உரைக்கிறார்கள். ஆனபோதிலும் தீயபழக்கவழக்கங்களை விட மனதில்லாமல் இப்பள்ளிக்கூடங்களுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பமுடியாமலிருக்கின்றனர். இது மிகவும் பரிதாபகரமான நிலையே.

நமது பள்ளிக் கூடங்களில் படிக்கும் பிள்ளைகள் அறிவிலும், அந்தஸ்திலும் மற்றைய பள்ளிக்கூடத்துப்பிள்ளைகளுக்குச் சிறிதும் குறைந்தவர்களல்ல. இன்னும் எல்லாவித அரசாங்க பரீக்ஷைகளுக்கும் இவர்களை தயார் செய்து அனுப்புவதற்குவேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகின்றன. இவ்விதம் இருந்தும் பெற்றோர்கள் ஏன் தயங்குகிறார்கள். பொன்னை புறக்கணித்து கில்ட், இமிடேஷன் நகைகளை ஆதரிக்கும் மனப்பான்மையைப் போலல்லவா தோன்றுகிறது இம்மனப்பான்மை. பொன்னைப் புறக்கணிக்கவும் வேண்டுமா. இது சரியா என்பதையோசிக்கவேணும். நமது ஸமூஹத்தினரிடையே நல்லுணர்ச்சி ஏற்பட்டால்தான் நன்மை உண்டு. இனியாவது இவ்வுணர்ச்சி ஏற்படவேண்டும்.

ஸ்ரீ:

செய்திகள்

வித்வத்ஸதஸ்.

ஜ்ஞாந வைராக்யாநுஷ்டாந ஸம்பந்நராய் பவுண்டரீகபுரம் ஸ்வாமி என்று ப்ரஸித்தராய் எழுந்தருளி யிருந்த பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸமஹாதேசிகன் ஸ்வாமியின் வர்ஷாராதந மஹோத்ஸவம் நாளது மன்மதவருஷம் ஐப்பசிமீ 13௳ (30—10—55) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அந்த ஸமயம் ஸ்ரீ உப. வே. ஜ்ஞானஸாகரம்- மதத்ரய நிரூபக ஏ. வி. கோபாலாசார்யஸ்வாமியால் நடத்தப் பட்டு வந்த வித்வத் ஸபை நடைபெறும். தத்ஸமயம் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ரங்கநாதமஹா தேசிகனால் நடத்தப்பட்டு வந்த லேகக வித்வத் பரீக்ஷையும் ஐப்பசிமீ 11௳ (28-10-55) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அதிகரண ஸாராவளியில் இரண்டாவது அத்தியாயம் பூராவும், தத்வமுக்தாகலாபத்தில் முதலாவதான ஜடத்ரவ்யஸரம் ஸம்பூர்ணமும் இவ்வருஷ லேகக பரீக்ஷைக்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ச்லோகங்கள் முகஸ்தமாயிருக்கவேண்டும். இப்பரீக்ஷையில் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களே அந்வயிக்கத் தகுந்தவர்கள்.

ஸ்ரீபவுண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரமகார்ய நிர்வாஹிகளின் நியமனப்படி

சின்ன மு. ர. ஸ்ரீநிவாஸபட்டாசாரியர்.

வில்லூரில் நவாஹ ராமயண ப்ரவசனம்.

கிராம, தேச, க்ஷேமாபிவிருத்தியை உத்தேசித்து இவ்வூர் அக்ரஹாரவாசிகளால், ஸ்ரீகண்ணன் ஸந்நிதியில் ஸ்ரீ. உப. வே, வில்லூர் வித்வான் ஆசுகவி. ஸ்ரீநிவாஸராகவாசார்யர் ஸ்வாமியைக் கொண்டு நவாஹ ராமாயண ப்ரவசனம் செய்வதாய் நிச்சயிக்கப்பட்டு (25—5—55) முதல் பிரதி தினம் இரவு 7 மணிமுதல் 11 மணிவரை நடைபெற்று 2—6—55 திங்கள் அன்று, ஸ்ரீராமர் பட்டாபிஷேகத்துடன், பூர்த்தியடைந்தது. பிரதி தினம் காலை 7 மணிமுதல் ஸ்ரீ. உப. தே. தி. வீரராகவாச்சாரியர் ஸ்வாமி மூல பாராயணம் செய்தார். ஊர் வாசிகளான ஸ்ரீ.உப.வே. கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி முதலியவர்கள் ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக தினத்தன்று உள்ளூர் ஸ்வாமிகளுடன், வெளியூர்களிலிருந்து ராமாயணகதா ப்ரவசனத்திற்கு எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கும் ததீயாராதனமும் பண்ணி வைத்தார்கள். கிராம வாசிகள் ப்ரவசன கர்த்தாவுக்கும், மூலபாராயணகர்த்தாவுக்கும் யதாசக்தி ஸம்பாவனைச் செய்தார்கள். பக்தர்கள் அனைவரும் வந்திருந்து, பிரதி தினமும் இராமாயணத்தை சிரவணம் செய்து ராமனுடைய அனுக்ரகத்திற்கு பாத்திரர் ஆனார்கள்.

V. S. வீரராகவன்.

ஸ்ரீ:

திவ்யஸூக்திரஸாஸ்வாதம்

மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோரின்சொலில்லை
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளிவிளிவன்வாளா
புனத்துழாய் மாலையானே! பொன்னி சூழ் திருவரங்கா!
எனக்கினிக் கதியென் சொல்லாயென்னையாளுடையகோவே.

(இ-ள்) மனத்தில்-நினைவில், ஓர்-சிறிதும், தூய்மை-பரிசுத்தமுடையதாயிருக்கும் தன்மை, இல்லை-உண்டாகவில்லை, வாயில்-பேச்சில், ஓர்-ஒன்றுகூட, இன்சொல்-கேட்போருக்கு இன்பத்தை விளைவிக்கக்கூடிய வார்த்தை இல்லை-எழுமாட்டேனென்கிறது, சினத்தினால்-கோபமே காரணமாக, செற்றம் நோக்கி-விரோதத்தைக்கைக்கொண்டு, வாளா-வீணே, தீவிளி-கொடுமையான சொற்களை விளிவன்-கத்துவன், புனத்துழாய்-புனக் காடுகளில் விளையும் துளஸியாலான, மாலையானே-மாலையை யணிந்தவனே, பொன்னி-காவிரி நீர், சூழ்-சுற்றிலுமுள்ள; திருவரங்கா-அழகிய நாடகமேடையின் கண்ணுள்ளவனே, என்னை-அடியேனை, ஆளுடைய-ஆட்கொண் பரிபாலிக்கும், கோவே-தலைவனே, எனக்கு-அடியேனுக்கு, இனி-வருங்காலத்தில் கதி என்-என்ன கதி, சொல்வாய்-நியமித் தருளவேண்டும். (கருத்து) கோபமும் மருந்தும் கூறும் பாசுரமிது. இங்கே மனம் என்பது அதன் செயலாகிய நினைவு எண்ணம் என்றும் பொருளில் வந்தது. ஓர் என்பதற்கு நல்லது தீயதென்பதைப் பகுத்துணரும் என்று பொருள் கொள்ளினுமாம். வாய் என்பது ஆகுபெயராய் அதினின்றெழும் சொல்லுக் காயிற்று. சினத்தோடு கூடின ஆல் என்னும் 3-ம் வேற்றுமையுருபு கருவிப் பொருளிலும் கர்த்தாப் பொருளிலும் வந்தது. செறு என்னும் பகுதியடியாகத் தோன்றிய செற்றம் எனும் சொல் பிறருக்குத் தீங்கை விளைவித லென்னும் பொருளையுடையது. தனக்கும் தீங்கு விளைத்துக்கொள்ளும் அச் செற்றத்தின் பயனும் அதனுள்ளடங்கும். வாளா என்பது இவர் வீணாகக் கோபங் கொண்டு கொக்கரித்தலால் தனக்கே விளையும் துன்பத்தைத் தவிர வேறு யாதொரு நற் பயனும் விளையாமையைக் குறிக்கிறது. இவ் விதம் மனமொழி செயல்களால் மிகத்தாழ்ந்த நிலையிலிருக்கிற ஒருவனுக்கு மருந்து கூறுகிறார். மனம் சுத்தப்பட்டு அவன் நினைவுகளும் எண்ணங்களும் பகவத் பாகவத பரமாகவும் கைங்கர்யவகமாகவும் திருந்தியமைய பகவானுக்கு அர்ச்சித்த அல்லது அவன் திருமேனியிலமைந்த திருத்துழாயைச் சாப்பிட வேணுமென்கிறார். திருத்துழாய் ஒரு கன பதார்த்தமாகையால் அதன் பரம ஸூக்ஷ்ம பாகம் பகவத் ஸம்பந்தியானபடியாலும், அது மனமாக மாறும்போது மனஸ்ஸுக்குப் பரம பரிசுத்தத்தை யுண்டாக்கி விடும். இதைச் சாந்தோக்யோபநிஷத் 6-வது ப்ரபாடகத்தில் „அன்னம் அசிதம்'' என்று தொடங்கும் 5-வது ப்ராஹ்மணத்தில் கண்டுகொள்க. இது புனத்துழாய் மாலையானே! எனும் விளியின் குறிப்பு

இனி ரஸனேந்திரியமாகிய நாக்கின் சுத்திக்குப் பெருமாளிடம் சம்பந்தமுள்ள தீர்த்தத்தை தினம் உட்கொள்ள வேண்டுமென்கிறார். ஸ்ரீ ரங்கநாதனுடைய நித்ய சம்பந்தமுடைய காவிரி ஏதோ த்ருவிக்ரமாவதார காலத்தில் ப்ரஹ்மாவால் சரண்யன் திருவடியை அலம்பியதும், ராமாவதாரத்தில் சரண்யனே இறங்கி நீராடியதும், கிருஷ்ணவதார காலத்தில் சரண்யன் திருமேனி ஸம்பந்தமுள்ள காளிந்தியால் சேரப் பெற்றதுமான கங்கையைக் காட்டிலும் புனிதமானது. இதை உபலக்ஷணமாய்க் கொண்டு பெருமாளுக்குப் புருஷஸூக்தாதிகளின் பாராயணத்தோடு திருமஞ்சனம் செய்த மந்திரங்களால் ஜபிக்கப்

பெற்ற எல்லா திருமஞ்சன தீர்த்தங்களும் என்று பொருள்கொள்ளத் தக்கது. அவைகளெல்லாம் ரஸனேந்த்ரியமாகிய நாக்கைப் பரிசுத்தமாக்கி மிக மங்களகரமானதும், அர்த்த புஷ்டியுடையதும் ஶாஸ்த்ர முடிவுகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருப்பதும் "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற வள்ளுவரின் 643வது குறளிற்கண்ட விலக்கணங்களுள்ள இனிய சொற்களை வாயிலிருந்து வரும்படி செய்யக்கூடியவை. இது "பொன்னிசூழ் திருவரங்கா" என்பதன் குறிப்பு. இனிநான் எப்பெருமானுக்கு தாஸபூதன்; அவன் எனக்குத் தலைவன்; என்னை நியமிக்கிறவன்; நடத்துகிறவன்; சேஷத்வ பாரதந்த்ர்யங்களை தன்னிலே; கைங்கர்யமே தனக்கு ஸ்வரூபம் என்னுப்ஜ்ஞாபகம் இடைவிடாமலிருந்து கொண்டு இந்தஜ்ஞானம் ப்ரதிஷ்டிதமாகுமானல்தான் ஸ்வரூப விருத்தமாகச் செய்யும் குற்றங்களை தன் மனத்தில் நிறைந்து பிறர்குற்றம் தனக்குப் புலப்படுவதேயில்லாமல் ஒழிந்துபோய்ப் பிறர் குணங்களை கண்களிலும் மனத்திலும் தோன்றிக்கொண்டும் அந்த குணங்கள் ஒன்று பத்து நூறாக வளர்ந்து கொண்டுமிருக்கும். திருக்கோட்டியூரிலுள்ள திருந்து நான்மறையோர் இவ்விதமுள்ளார்களென்பதைக் குறிப்பிட்டுக் "குற்றமின்றிக் குணம் பெருக்கி" என்றார். "தோஷோயத்யபிதஸ்யஸ்யாத், ஸதா மேதத் அகர்ஹிதம்" என்ற ஸ்ரீராமபிரான் வாக்கில் தோஷமிருப்பது தெரியும். ஆனல் ஸத்துக்கள் அவைகளைக் கணிசாக்க மாட்டார்களென்றும் பொதுப்பட ஸத்துக்களின் லக்ஷணம் கூறப்பெற்றது. ஆனல் ஸத் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கோ வென்னில்— "இன்றி" என்பதனல் அவைகளின் இருக்கையே புலனாகாது என்று அதற்கு மேலே ஒருபடி அருளிச் செயல் பேசுகிறது. "பெருநிலத்தாருயிர்க்கெல்லாம் செற்றமே வேண்டித் திரித்திடுவேன்" என்ற பெரிய திருமொழிப் பிரயோகமும் இங்கே நோக்கத் தக்கது. இந்த சேஷத்வபாரதந்த்ரயாதிபாவங்கள் மனத்தில் த்ருடப்படச் சினத்தினற் செற்றம் நோக்கித் தீவிளி கனியும் தன்மையும் நசித்துப்போகும். அந்தக்குறிப்பை "என்னையாளுடைய கோவே" என்னும் விளி குறிக்கிறது. இந்த 3 ஸம்போதங்களால் குறிக்கப்படுகிற உன்னுடைய திருமேனி ஸம்மந்தமுள்ள திருத்துழாயை உண்டு மனத்தின் சுத்தியை அடைவதும், திருமஞ்சன தீர்த்தத்தை உண்டு நல்ல நாக்குடையவனுதலும் என்னை நீஆட்கொண்டு நான்எவ்வளவு பிழைகள் செய்தாலும் க்ஷமித்துக் காப்பாற்றுகிற உதார குணத்தை நினைத்து நினைத்து என் குற்றங்கள் மட்டுமே என் மனத்தில் நிரம்பிப்பிறரிடம் யாதொரு குற்றமுமே காணுதவனுகி அதனல் கோபதாபங்களுக்குச் சிறிதும் காரணமில்லாமலும் அவையடியாயெழும் செற்றமும் வீணுகச் சத்தம் போட்டுக் கத்துதலும் ஒழியும் என்பது பாசுரத்தின் முடிந்த கருத்தாகும். அபியுக்தர்கள் இந்தப் பாசுரத்தை விஸ்தரித்துப் பொருளுரைக்குங்கால் அருளிச்செயல்களிலிருந்தும் ஸ்ரீமத் ராமாயண பாகவதாதிக்ரந்தங்களிலிருந்தும் ஆசார்யர்கள் கவிச்ரேஷ்டர்கள் நூல்களிலிருந்தும் உதாஹரித்துப் பொருள் விளக்கக்கூடிய விஷயங்கள் மிகப்பலவுள. ஆயினும் அவைகள் விரிக்கிற் பெருகு மெனும் சங்கையாலும் இங்கே சொல்லியிருக்கும் ஹேஷ்யங்களை சாஸ்த்ரஜ்ஞர்களான ஸம்ப்ரதாய நிஷ்டர்கள் திருவுள்ளங்களுக்கு எற்குமோவென்றும் பயத்தினலும் விரமிக்கிறேன்.

ஸ்ரீ:

ஹிந்து தர்மமும் மதமும்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸதாசார்ய கடாக்ஷத்தாலே ஐஹிகாமுஷ்மிகங்களை நாம் பெறக்கூடும். ஒருவன் இக்கலியுகத்தில் இவ்வளவு செய்தாலும் அவன் ரிஷிதுல்யனிறே. நம்முடைய மதம் இவ்வளவு மஹிமை வாய்ந்திருந்தும் சிலர் இதில் நம்பிக்கை வைக்காமலிருப்பது சோகிக்கத் தக்கது. நம்பிக்கையிருந்தும் இவ்வளவாவது கொஞ்சம் அவகாசத்தை ஏற்படுத்திக்கொண்டு ஸந்த்யாதிகளை அனுஷ்டிக்காமலிருப்பது மிகவும் சோசநீயம். ஆனால் நாம் நம் குழந்தைகளை பால்யத்திலிருந்து நன்றாய் ஸதாசாரத்தில் பழக்கி உபநயநாதிகள் செய்து பாலர்களை ஸந்த்யாவந்தநாதிகள் செய்யும்படி செய்யவேண்டும்.

ஜன்மங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் உத்தமமான ஜன்மம் மனுஷ்ய ஜன்மம். இதனாலேயே ஐஹிகாமுஷ்மிகங்களை யனுபவிக்கலாம். திர்யக்ஜன்மத்தாலே ஐஹிகபோகமும் ஆமுஷ்மிகபோகமும் அடையமுடியாது. முக்யமாய் மனுஷ்யனுக்கு ஜ்ஞாநமென்பது மற்ற ஜந்துக்களைக்காட்டிலும் அதிகம். 'ஆஹாரநித்ரா பயமைதுநாநி ஸாமாந்யமேதத் பசுபிர் நராணாம்' ஆஹாராதிகள் நமக்கும் அதற்கும் ஸமானமே. ஆனால் ஜ்ஞானமென்பதையும், விவேசனசக்தியையும், ப்ரஹ்மத்தை யறியக்கூடிய ஓர் ஜ்ஞானவிசேஷத்தையும் ஜ்ஞானத்தினாலேதான் ஸம்பாதிக்கமுடியும். இப்படிப்பட்ட மனுஷ்யஜன்மத்தில் ப்ராஹ்மண்யம் என்பது மிகவும் சிறந்தது. நாம் ஜன்மாந்தரத்தில் எவ்வளவோ புண்யம் செய்தே இந்த ஜன்மம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதனால் மோக்ஷாந்தமான ஐச்வர்யத்தை அடையலாம். மறுபடி பிறப்பதும் இறப்பதுமாக இருந்து இந்த ஸம்ஸாரத்திலேயே மூழ்கிக்கிடக்காமல் மறுபடி இந்தகர்ம பூமியில் பிறக்காமல் பசி தாஹம் முதலானவை இல்லாமல் ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்துடன் நாம் ஸ்ரீவைகுண்டத்தில் பகவானைப்போல் சங்கசக்ர தாரியாக இருந்து அங்கேயும் அவனுடைய கைங்கர்யமே பரம ப்ரயோஜனமென்றெண்ணி அவனுக்கு சேஷவிருத்தியைப் பண்ணிக்கொண்டிருப்பதற்கு ஸாதகமான ஜன்மமிறே இது. இப்படிப்பட்ட ப்ரஹ்ம ஜ்ஞானத்திற்கு அங்கபூதமான ஸம்ஸ்காராதிரூபமான தர்மத்தை மனு இவ்வாறு சொல்லுகிறார்:—

'வித்வத்பி: ஸேவித: ஸத்பிர் நித்யமத்வேஷராகிபி: | ஹ்ருதயேநாப்யநுஜ்ஞாதோ யோ தர்மஸ்தம் நிபோதத ||'

[ச்ரேயஸ்ஸாதனமான தர்மமானது வேதத்தை ப்ரமாணமாவுடையது. இப்படிப்பட்ட தர்மத்தை நீங்கள் கேளுங்கள் என்று சொல்லுகிறார்] இந்த தர்மமானது 'சீக்ஷா வ்யாகரணம் சந்தோ நிருக்தம் ஜ்யோதிஷம் ததா | கல்பச்சேதி ஷடங்காநி வேதஸ்யாஹுர்மநீஷிண:' என்கிறபடி சொல்லிய அங்கங்களுடன் கூடிய வேதமறிந்து, ராகத்வேஷாதிகளை யற்ற ஸத்புருஷர்களாலே தெரிந்துகொள்ளப்பட்டதென்று சொல்லுகிறார். ஆகையால் தர்மம் என்றால் அலௌகிகமான ச்ரேயஸ்ஸுக்களுக்கு ஸாதனமான கார்யங்களெல்லாம் தர்மம் என்று சொல்லப்படுகிறது. இந்த தர்மமானது ஹிந்துக்கள் என்று சொல்லப்பட்ட எல்லா வகுப்பார்களாலும் அவரவருக்கு விதித்தபடி செய்யவேண்டியதே.

இனி ஹிந்துக்களுடைய வர்ணங்களையும் ஆச்ரமங்களையும் கொஞ்சம் விசாரிப்போம். இப்படிப்பட்ட தர்மத்தை ரக்ஷிப்பதற்காக பகவானுடைய முகத்திலிருந்து உண்டான ப்ராஹ்மணர்களுக்கும், கைகளிலிருந்து உண்டான க்ஷத்ரியர்களுக்கும், தொடைகளிலிருந்து உண்டான வைச்யர்களுக்கும், பாதங்களிலிருந்து உண்டான சூத்ரர்களுக்கும் தனித்தனியாக கர்மங்களை ப்ரஹ்மா கல்பித்தார்.

'அத்யாபநமத்யயநம் யஜநம் யாஜநம் ததா | தாநம் ப்ரதிக்ரஹஞ்சைவ ப்ராஹ்மணாநாமகல்பயத் ||'

ப்ராஹ்மணர்களுக்கு அத்யாபனம், அத்யயனம், யஜனம், யாஜனம், தானம், ப்ரதிக்ரஹம் என்கிற ஆறு கர்மங்களை கல்பித்தார். அத்யாபனமாவது:- பிறருக்கு வேதத்தைக் கற்பித்தல். அத்யயனம்— தான் கற்றுக்கொள்ளுதல். யஜனம்- யாகம் செய்தல். யாஜனம்— யாகம் செய்துவைத்தல். தானம்- தான் தானம் கொடுத்தல். ப்ரதிக்ரஹம் – தான் தானம் வாங்குதல் என்கிற 6 கர்மாக்கள் ப்ராஹ்மணர்களுக்கு ஏற்பட்டன. ஆகையால் ப்ராஹ்மணர்கள் ஷட்கர்மநிரதர்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

'ப்ரஜாநாம் ரக்ஷணம் தாநமிஜ்யாத்யயநமேவ ச | விஷயேஷ்வப்ரஸக்திஶ்ச க்ஷத்ரியஸ்ய ஸமாஸத: ||'

ப்ரஜைகளை ரக்ஷிப்பதும், தான் தானம் கொடுப்பதும், யாகம் செய்வதும், வேதாத்யயனம் செய்வதும், ந்ருத்த வாத்ய கீதாதி விஷயங்களில் ஸம்பந்தப்படாமலிருப்பதும் க்ஷத்ரியனுடைய தர்மம்.

'பஶூநாம் ரக்ஷணம் தாநமிஜ்யாத்யயநமேவ ச | வணிக்பதம் குஸீதஞ்ச வைஶ்யஸ்ய க்ருஷிமேவ ச ||'

பசுக்களை ரக்ஷிப்பதும், தானம், யாகம், அத்யயனம் இவைகளைச் செய்வதும், வ்யாபாரமும், வட்டியால் பணத்தை ஸம்பாதிப்பதும் வைச்யனுடைய தர்மங்கள்.

ப்ராஹ்மணாதி வர்ணங்களுக்கு பரிசர்யை செய்துகொண்டு அவர்களுடைய குணங்களை நிந்திக்காமல் அவர்களுடன் ஒத்து வாழ்வது சூத்ரர்களுடைய தர்மங்கள்.

(தொடரும்)

திருத்தம்

சென்ற ஸஞ்சிகையில் ஸஞ்சாரக்ரமத்தில் 142 வது பக்கத்தில் 14-4-55 ல் ப்ராந்தியங்கரையில் என்பதை 'நாகைப்பட்டிணத்தில்' என்றும், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஆராதித்தார் என்பதுடன் ஸ்ரீ. V. S. ராமஸ்வாமிஅய்யங்கார், ஸ்ரீ. K. ராஜகோபாலஅய்யங்கார், ஸ்ரீ. A. ராஜகோபாலஅய்யங்கார் முதலிய ப்ரமுகர்கள் பூர்ண கும்பத்துடன் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்று ஆராதித்தார்கள் என்றும், பிறகு, 'அவ்வூர் எழுந்தருளாநின்ற' என்பதை 'அவ்வூரில் எழுந்தருளியிருக்கும்' என்றும், 143வது பக்கத்தில் முதல்பத்தியில் 34வது வரியில் உள்ள 'மூலங்குடி ஸ்ரீ கோபால அய்யங்காரை' என்பதை 'மூலங்குடி ஸ்ரீ கோபாலஅய்யரை' என்றும் திருத்தி வாசிக்கவும்.

அன்னதானம்

இவ்வூர் ஈ. என். எ. சாமுபட்டர்பார்யையும், P. S. லக்ஷ்மீநாரயணஅய்யர் தாயாருமான அநந்தலக்ஷ்மிஅம்மாளின் வருஷாப்தீகத்தன்று 200ப்ராம்ஹணர்களுக்கும். 5000க்குமேல் இதரவகுப்பு ஏழைகளுக்கும் ததீயாராதனம் நடைபெற்றது. அநந்தலக்ஷ்மிஅம்மாள் ஸ்ரீஅழகியசிங்கர் பாலக்காடு பள்ளிபுரத்தில் எழுந்தருளியிருந்த பொழுது ஸமாச்ரயணமும் சரணாகதியும்பண்ணிக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் திருவடியைஆச்ரயித்ததால் அதிஸந்துஷ்டையாய் இருந்துவந்தாள்.

P. R. V. ராமன்.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இப்பொழுது மட்டுமெல்லாமல் முன் காலத்திலும் அநுக்ரஹம் செய்த திருவடியே இது. ஆச்ரிதர்களுக்கு அநுக்ரஹம் செய்வதே அதன் ஸ்வபாவம். அன்று முதலே அநுக்ரஹம் செய்து வருகின்றது. அதன் பயனாகவே இன்று யாம் உன் ஸேவையைப் பெற வந்திருக்கின்றோம். அந்தத் திருவடிக்கு 'ஜயம்', என்றார்கள்.

இதற்கு அடுத்தபடி ஸ்ரீராமாவதாரம். அகண்ட பூமண்டலாதிபதியான தசரத சக்ரவர்த்திக்குக் குமாரனாக அவதரித்தும் தபஸ்வி வேஷம் பூண்டு காட்டில் ஸஞ்சரித்துப் பொல்லாவரக்கனைக் கொல்வதற்காக அவன் வஸிக்கும் தென்னிலங்கை வரையில் நடந்து சென்றான் எம்பெருமான். 'பரித்ராணாய ஸாதூனாம்' என்றபடி ரிஷிகளும் ரிஷிகள் போன்றவர்களும் ஸேவித்து மகிழும்படியும் 'விநாசாய ச துஷ்க்ருதாம்' என்றபடி துஷ்டர்கள் யாவரும் ஒழியும்படியும் அந்தந்த இடத்திற்குச் சென்ற அந்தத் திருவடிக்கு 'ஜயம்' என்பது கருத்தில் உள்ளது. ஆயினும் மறுபடியும் முன்போலவே 'அடிபோற்றி' என்று சொல்வதை விரும்பாமல் வேறுவிதமாகச் சொல்லக் கருதி 'சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி' என்றார்கள். "தெற்கு திக்கில் பூமியின் எல்லையாகவிருக்கின்ற இலங்கை வரையிலும் சென்று, ஜல துர்க்கம் மலை துர்க்கம் எல்லாமிருந்து எவருமே ப்ரவேசிக்கமுடியாத அந்த ராக்ஷஸ ராஜதானியை அழித்த உன்னுடைய சௌர்ய வீர்ய பராக்ரமங்களுக்கு 'ஜயம்' என்றதாயிற்று.

இப்படி முன் அவதாரங்களில் செய்த உபகாரங்களைப் பேசிவிட்டு ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்திலேயே செய்ததைப் பேசுகின்றனர். அதில் திருவடியினால் செய்யப்பட்டது சகடாஸுர வதம். மிகச்சிறிதாய் வெகு ம்ருதுவாய் இருந்த திருவடியால் உதைத்து அஸுரனுடைய ஆவேசத்தினால் வெகு பயங்கரமான வண்டி ஒன்று தூள் தூளாகச் சிதறிப்போம்படி செய்து தன்னைக் காப்பாற்றித் தனது மாதா பிதாக்களுக்கும் மற்றவர்களுக்கும் பரமானந்தத்தை உண்டு பண்ணினான், என்ற இக் குணத்தை மறுபடியும் மறுபடியும் நினைத்து பக்தர்கள் பரவசராவார்கள். இப்புகழுக்கு 'ஜயம்' என்றார்கள்.

இப்படித் திருவடியினால் செய்தருளிய மூன்று திவ்யசேஷ்டிதங்களைக் கீர்த்தனம் பண்ணி விட்டு இனித் திருக்கையினால் செய்தருளியவற்றைக் கீர்த்தனம் செய்கின்றார்கள். எம்பெருமான் தனக்குத் தீங்கு செய்யும் நோக்கத்துடன் கன்று வேஷத்தில் வந்து கன்றுகளோடு கலந்து நின்ற அஸுரனை அறிந்து அவன் பின்கால்கள் இரண்டையும் பிடித்துச்சுழற்றி அருகிலிருந்த விளாமரத்தின்மீது எறிந்தான். அந்த வேகத்திலேயே அந்த அஸுரன் உயிர் போய்விட்டது. அவன் உடல் மோதி அதனால் விழுந்த விளாம்பழங்களுடன் அவனும் தரையில் விழுந்தான். இது திருக்கைகளால் செய்த திவ்ய சேஷ்டிதமானாலும் அஸுரனை மேலே எறியும்போது திருவடிகளை முன்னும் பின்னுமாக வைத்து 'ஆலீடம்' என்று சொல்லக்கூடிய ஒரு அழகிய நிலையில் நின்றானகையால் அந்த ஸேவையைக் கருத்தில் வைத்துக்கொண்டு 'கன்று குணிலா வெறிந்தாய் கழல் போற்றி' என்றார்கள். குணிலா-எறியும் தடி. கழல்-திருவடி. மரங்களில் இருக்கும் பழங்கள் விழுவதற்காகத் தடியை அவற்றின் மேல் எறிவார்கள். அது போல் கிருஷ்ணன் அஸுரனை எறிந்தான். அப்போது நின்ற அழகிய நிலையிலுள்ள திருவடிக்கு 'ஜயம்' என்றார்கள்.

திருக்கையால் செய்த மற்றொரு அத்புத லீலை கோவர்த்தன பர்வதத்தை எடுத்துக் குடையாகப்பிடித்தது. கன்றுகுட்டி உருவில் வந்த ஓர் அஸுரனை எடுத்து எறிந்தது எம் மாத்திரம்; ஒரு மலையையேயன்றோ பெயர்த்

தூக்கிவிழ்த்துஒருகையால் ஏழுபகல் ஏழுராத்ரி தாங்கி நின்றான். அந்த சக்திக்கும் அந்தக் கருணைக்கும் 'ஜயம்' என்றார்கள். இந்த்ர னுக்கு உத்ஸவம் செய்வது ஆயர் குலத்தில் வம்சபரம்பரையாகவந்த வழக்கந்தான். ஆனால் ஸ்ரீக்ருஷ்ணன், யார் எந்த வேள்வி செய்தா லும் முடிவில் ஸர்வாந்தராத்மாவான பரம புருஷனிடத்திலேயே அதுவெல்லாம் போய்ச் சேர்கின்றது என்ற உண்மையைத் தனது ஜநங்களுக்கு அறிவிப்பதற்காக 'இந்த்ரன் உத் தேச்யதேவதை இல்லை' என்றும் 'பர்வதமே அவ்விதமேதவதை' என்றும் சொல்லி அவர்கள் செய்த பூஜையைத் தானே பர்வததேவதை யாகத்தோன்றி ஸ்வீகரித்தான். பதவீ மோ ஹத்தினு லுண்மையைமறந்த இந்த்ரன் தனது பூஜை தடைப்பட்டுவிட்டதாக எண்ணிப் பெருமழைபெய்து கோபர்களை உபத்ரவப் படுத்தி, ஸ்ரீ க்ருஷ்ணன் தனது அத்புத சக் தியினால் அவர்களுக்கு ரக்ஷகனாய் நின்றதைப் பார்த்த பிறகு மதிமயக்கம் நீங்கி வணங்கிச் சென்றான். இதையெல்லாம் கருத்தில் வைத் துக் 'குன்று குடையா வெடுத்தாய் குணம் போற்றி' என்றார்கள்.

இனி ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதற்காக எம்பெ ருமான் எப்பொழுதும் திருக்கையில் ஏந்திக் கொண்டிருக்கும் திவ்யாயுதத்திற்கு, திருச் சக்ரத்துக்கு, மங்களாசாஸநம் பண்ணினார் கள். எம்பெருமானிடத்திலும் அவனைச் சார்ந்தவர்களிடத்திலும் அபசாரப்படுகிறவர் கள் எல்லோரும் எம்பெருமானுக்குப் பகை; சத்ருக்கள். வேறுவிதமாக அவர்களை நல்ல வழிக்குக் கொண்டுவர முடியாதபோது சக்ரத் தாழ்வானை நியமித்து அவர்களை ஸம்ஹரிக்கச் செய்வான் எம்பெருமான். சிசுபாலனையும் கஜேந்த்ரத்தைப்பிடித்துப் பீடித்த முதலையை யும் கொன்றது சக்ராயுதமே. இது வென்று பகைகெடுக்கும். சக்ராயுதம் போயிற்று, வெற்றிபெறாமல் திரும்பிவந்தது, என்பது கிடையாது. நித்யவெற்றி அதற்கு. அந்த திவ்யாயுதத்திற்கு 'ஜயம்' என்றார்கள்.

கீழ்மேலுலகங்களில் ஒருஇடமும் விடாமல் எங்கும் தொட்டதை முதலில் பேசினார்கள். பூமியில்மாத்திரம் வெகுதூரம் நடந்துசென்ற தைப் பிறகு பேசினார்கள். நந்தகோபருடைய திருமாளிகையிலேயே ஓரிடத்தில் சகடாஸு ரனை உதைத்ததை அதன்பிறகு பேசினார்கள். இப்படித் திருவடி விஷயத்தில் க்ரமமாக தே சம் அதாவது- இடத்தின் சிறுமை தோன்றப் பேசினார்கள். சகடாஸுரனைக்கொன்றது ஒரு நொடிப்பொழுதில். அவ்விதமே வத்ஸாஸு ரனைக் கொன்றதும். ஆகவே காலத்தின் சிறு மை இங்கு தோன்றிற்று. அதனால் அதன் பிறகு ஏழுநாள் கோவர்த்தனம்தரித்ததையும், அதற்குப்பிறகு எப்போதும் ஆயுதம் தரிப்ப தையும் பேசினார்கள்.

இப்படி மங்களாசாஸனம்பண்ணி அந்த வழியாலே ஸ்தோத்ரம் பண்ணி அதன் பிறகு முன் 'யாம் வந்தகாரியம்' என்றுகுறிப் பிடப்பட்ட காரியத்தை விண்ணப்பம் செய் தார்கள். 'இவ்விதமாக நீ செய்த திவ்யசேஷ்டி தங்களில் சிலவற்றைக் குறிப்பிட்டோம். இன் னும் எத்தனையோ வ்யாபாரங்கள் இருக்கின் றன. அவைகளுக்குள் எத்தனை கீர்த்தனம் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் கீர்த்த னம் செய்து ஸ்துதிபண்ணி அதனால் ஸந் தோஷமடைந்த உன்னிடமிருந்து எங்களு டைய நோன்பிற்காக வேண்டிய பறையைப் பெற்றுக்கொள்வதற்காக இன்று இப்போது வந்திருக்கின்றோம். இதுதான் நாங்கள் வந் திருக்கும் கார்யம். இதை ஆராய்ந்து தகுந்த படி செய்ய நீ இரங்கவேண்டும். 'இரக்கம் அதாவது கருணை கொள்ளவேண்டும். ஸர்வ ஸ்வதந்த்ரனுகையால் நாங்கள் செய்யும் ஸ்தோ த்ரத்தையும் ப்ரார்த்தனையையும் நீ லக்ஷ்யம் செய்யாமலிருக்கலாம். நாங்கள் செய்யும் கார் யங்களில் எத்தனையோ லோபங்கள் இருக்கு மாகையால் அவற்றைக் கண்டு நீ பேசாமல் இருக்கலாம். ஆகிலும் நீ அப்படி இராமல் இரங்கவேண்டும். எல்லா லோபங்களையும் பொறுத்து எங்கள் விண்ணப்பத்தை ஏற்று அநுக்ரஹம் செய்யவேண்டு' மென்று கேட்டுக் கொண்டார்கள்.

25. ஒருத்தி.

பெண்களின் ரூபத்தையும் குணங்களையும் ஸாமர்த்யத்தையும் பக்தியையும் பேச்சின் அழகையும் பார்த்த ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அவர்களிடத்தில் உண்டான ப்ரீதிக்கு அளவே இல்லை. அவர்களுக்கு என்ன செய்யலாம் எதைக் கொடுக்கலாம் என்று இவ்விதமாக ஆலோசித்து ஆலோசித்து ஒன்றும் புரியாமல் பரவசனாக இருந்தான். அவர்களை மேலும் ஏதாவது பேசச்சொல்லி கேட்கவேண்டுமென்றெண்ணினான்; நாயகப்பெண்ணைப் பார்த்துச் சொன்னான்.

ஸ்ரீக்ருஷ்ணன்:— நீங்கள் என் விஷயத்தில் பேசின போற்றிப்பேச்சை யெல்லாம் கேட்டேன். ரொம்ப நன்றாகவே இருக்கிறது. பதங்களின் அமைப்பும், பொருள்களின்சேர்வையும், நீங்கள் பாடும் விதமும், தோற்றுவிக்கும் உணர்ச்சியும் எல்லாம் கேட்போர் மனத்தைக் கவர்கின்றன. இப்படியெல்லாம்செய்ய உங்களுக்கு யாரோ கற்பித்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. வெகு கெட்டிக்காரர்களான பெரியோர்களிடத்தில் நீங்கள் சிக்ஷை பெற்றிருக்கவேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு நன்றாக, இவ்வளவு சிறப்பாக சிறு குழந்தைகளான நீங்கள் பாடுவது, பேசுவது இயலாது.

க்ருஷ்ணன் இப்படிப் பேசியதைக் கேட்ட நாயகப்பெண்ணின் மனத்தில் அவமான உணர்ச்சி ஒன்று சிறிது உண்டாயிற்று. க்ருஷ்ணனிடத்தில் தங்களுக்குண்டான பக்தி மேன்மேலும் பொங்கி வரும் பெரும் முனிவர்களுக்கும் யோகிகளுக்கும் கிடைக்கப் பெறாத வகையில் தமது மனோ வாக் காயங்கள் மூன்றும் பரவசங்களாய் வெகு அத்புதமாய் அவனுடைய கைங்கர்யங்களைச் செய்ய ஈடுபட்டிருக்கின்றன வென்று எண்ணி மிகுந்த களிப்பும் த்ருப்தியும் கொண்டவள் அவள். ஆகையால் மற்றவர்களிடத்தில் சிக்ஷை பெற்று இப்படி பகவத் ஸேவை செய்வதாகப் பிறர் எண்ணினால், க்ருஷ்ணனே இப்படி எண்ணினால் இது உண்மையில் தங்களுக்கு அவ்வளவு பக்தியில்லை என்பதைக் காட்டுமே யென்று நினைத்து வருந்தியவள் போல் ஆனாள். ஆனால் உண்மையில் வெகு புத்திமதியாகையால் மறுக்ஷணத்தில் விஷயத்தை உள்ளபடி உணர்ந்தாள். ஸ்ரீக்ருஷ்ணன் பரீக்ஷார்த்தமாகவும் பரிஹாஸமாகவும் இப்படிச் சொல்லுகிறான் என்பதை அறிந்தாள். உடனே மறுமொழி கூறினாள்.

நாயகப்பெண்:- எம்பெருமானே! உனக்குத் தெரியாதது என்னவிருக்கின்றது. உனது ஸேவையைத் தக்கபடி செய்யத் தாமே அறியாதவர்கள் பிறரிடத்தில் கற்றாவது செய்ய வேண்டியது அவச்யமன்றோ. அவர்களிடத்லும் இரங்கவேண்டியது உன் கடமையன்றோ. நெடுமாற்கடிமை செய்வேன்போலவனைக் கருத வஞ்சித்துத் தடுமாற்றற்ற தீக்கதிகள் முற்றுந் தவிர்ந்தசதிர் நினைந்தால் என்றல்லவோ பெரியோர்கள் பேசுகின்றனர். ஆனால் நாங்கள் கற்றது உன்னிடத்தில்தான். உன் திருவடியையே நாங்கள் எப்பொழுதும் த்யானித்துக்கொண்டிருக்கின்றோம். இந்த த்யானம், இந்தபக்தி எங்களுக்கு இதையெல்லாம் கற்பித்தது. உன்பக்தி கற்பிக்காததைப் பிறர் யார் கற்பிக்கமுடியும்? உன் பக்தி கற்பிக்கப் புகுந்தால் பிறருடைய அபேக்ஷை எதற்கு?

'तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम्।
ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते॥
तेषामेवानुकम्पार्थमहमज्ञानजन्तमः।
नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता॥'

என்றபடி உன்னைச் சேர்ந்தவர்களுக்கு மேல் மேல் உன் ஸேவாவிஷயத்தில் சக்தியை உண்டாக்குவது உன் இயற்கையன்றோ. இப்பொழுது நாங்கள் சொன்ன நாலு வார்த்தைகளால் நீ ஸந்தோஷமடைந்தாயாகில் அதைப்பற்றி நாங்கள் மிக மகிழ்கின்றோம். ஆனால் இந்த நாலு வார்த்தைகளையும் நாங்கள் பேசும்படி செய்தது நீதான். நீயே எங்களைப் பேசுவித்து நீயே மகிழ்கின்றாய். அதில் நாங்கள் அழகாகப் பேசினோமென்பதற்கு இடமேது?

இப்படி நாயகப்பெண் பெரும் வேதாந்தமாகப் பேசினதைக் கேட்ட எம்பெருமானுக்கு உண்டான ஆநந்தம் எல்லை கடந்து சென்றது மறுபடியும் பேசினான்.

ஸ்ரீக்ருஷ்ணன்:— (சிரித்துக்கொண்டே) அப்படியா? ஒருவரும் உங்களுக்குக் கற்பிக்க வில்லையா? நீங்களேயா இவ்வளவு புத்திசாலித் தனமாக ஸாஹித்யம் கட்டி ஸங்கீதம் பாடி னீர்கள்? ரொம்ப ஸந்தோஷம். இப்பொழுது புதிதாக ஒன்று சொல்லு பார்ப்போம்.

இப்படி ஸ்ரீக்ருஷ்ணன் உகந்து கட்டளை யிட்டதைப் பற்றி அபாரமான ஸந்தோஷ முண்டாயிற்று நாயகப்பெண்ணுக்கு. என்ன க்ருபை, என்ன வாத்ஸல்யம், என்ன ஸௌ லப்யம் நம்மிடத்தில் பகவானுக்கு என்று வியந் தாள், மகிழ்ந்தாள், பூரித்தாள். தனது திரு விளையாட்டுக்கு நம்மை ஒரு கருவியாகக்கொண் டானே எம்பெருமான் என்று நினைக்க நினைக்க அவளுக்கு உண்டான மனோநிகழ்ச்சி இவ்வித மானதென்று கூறமுடியாத நிலையை அடைந் தது. உடனே அவன் கட்டளைப்படி ஒன்று சொல்ல வெகு உத்ஸாஹம் கொண்டாள். எதைப்பற்றிச்சொல்லலாமென்று ஆலோசனை செய்தாள். 'மாயனை மன்னுவடமதுரை மைந் தனை ஆயர் குலத்தினில் தோன்றுமணிவிளக் கை' என்று அவதாரத்தைக் குறிப்பிட்டு அதுமுதல் நடந்தலீலைகளையெல்லாம் ஒருவாறு பேசி முடித்தாயிற்று. புதிதாக ஒன்றை இப் போது பேசுவது பொருத்தமற்றது என்பது தோன்றிற்று. இந்த நிலையில் எதை விஷய மாகக்கொள்வது என்று ஆலோசித்தாள். அப்போது அந்த அவதாரத்திலுள்ள லீலை களில் முதலாவதான பிறப்பு வளர்ப்பு என் கிற இந்த லீலைகளே வெகு ஆச்சர்யமானவை ஆயிற்றே. அவற்றாலே அவனுக்குத் தன் பக் தர்களிடத்திலுள்ள மயக்கம் எவ்வளவு என் பது புலப்படுகின்றதே. ஆகையால் ஸ்பஷ்ட மாகவும் சுருக்கமாகவும் அவற்றையே பற்றிப் பேசலாமென்று தீர்மானித்து

ஒருத்தி மகனாய்ப் பிறந்தோரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தருக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே

என்று இனிய குரலில் பக்திரஸம் ததும்பப் பாடினாள். ஒரே ராத்ரியில் ஒருத்தி மகனாய்ப் பிறந்து மற்றொருத்தியின் மகனாய் ஒளித் தான். இவ்விதப்பிறப்பு உலகத்தில் மற்ற யார் விஷயத்திலாவது கண்டதுண்டா? கேட் டதுண்டா? தேவகியினிடத்திலும் யசோதை யினிடத்திலும் அவனுக்கிருந்த அபார அநு க்ரஹபுத்தியன்றோ இவ்வாறு செய்யும்படி அவனைத் தூண்டிற்று. 'ஒருவன் மகனாய்ப் பிறந்தோரிரவில் ஒருவன் மகனாய்' என்று தகப்பனாரைக் கூறாமல் 'ஒருத்தி ஒருத்தி' என்று தாய்களையே கூறினாள், தம்மைப் போன்ற ஸ்த்ரீகள் விஷயத்தில் அவன் செய் திருக்கும் அநுக்ரஹவிசேஷத்தை எடுத்துக் காட்டுவதற்காக. தாய் தகப்பனார்களுக்குள் புத்ரனிடத்தில் தகப்பனாருக்குள்ள வாத்ஸல் யத்தைக்காட்டிலும் தாய்க்குள்ள வாத்ஸல்யம் அதிகமானது. இதையநுஸரித்து புத்ரனுக் குத்தாயினிடத்தில் பற்று அதிகமாயிருக்கும். ஆகவே எம்பெருமானுடைய அதிக வாத்ஸல் யத்தை வெளிப்படுத்தவேண்டிய இந்த ஸம யத்தில் தாய்களைக் குறிப்பதே உசிதமென்று கருதினாள்.

'தேவகிமகனாய்ப் பிறந்தோரிரவில் யசோ தை மகனாய் ஒளித்து வளர' எனலாம். ஆனால் அப்போது அப்பெயர்களால் அவர்களுக்குச் சிறப்புத் தோன்றும். ஏதோ அவர்களுடைய அரிய புண்யச் செயல்களாலும் தபோபலத்தி னாலும் எம்பெருமான் வந்து இப்படிப் பிறக்க வேண்டியதாயிற்று என்று கூறக் கருதினது போலாகும். எம்பெருமானுடைய க்ருபைக் கும் வாத்ஸல்யத்திற்கும் பெருமை தோன் றாது. ஆகையால் வெகு ஸாமர்த்யமாக ஒரு த்தி ஒருத்தி என்றே பேசினாள்.

பிறப்பில்லாதவன் மற்றவர்போல் பிறப்பது விசேஷம். பிறந்தால் ஒருத்தி மகனாய்த்தான் பிறக்கவேண்டும். அதில் ஒருத்திமகனாய்ப் பிறந்து மற்றொருத்தியின் மகனாவது விசே ஷம். அதில் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனாய் ஸர்வலோகேச்வரனாயிருக்குமவனொளிந்து இப் படியாவது இன்னும் விசேஷம்.

(தொடரும்)

ஸ்ரீ:

பட்டாபிஷேக ஸ்ரீமுகம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இப்படிகளால் நம்மாழ்வாரை மங்களாசாஸனம் செய்து அவருடைய அநுக்ரஹரூபமான திருப்பரியட்டம் அபயஹஸ்தம் முதலியவற்றைப் பெற்று பின் வானமாமலையில் தோதாத்ரிநாதனை மங்களாசாஸனம் செய்துவிட்டு திருக்குறுங்குடி நம்பிஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று. இந்த திருக்குறுங்குடி எம்பெருமானுடைய விலக்ஷணமான அவதாரந்தான் நம்மாழ்வார் என்று பெரியோர்களின் பணிப்பு. இந்த க்ஷேத்ரத்தில் தான் ஸ்ரீஅஹோபிலமடம் 28-வதுபட்டம் ஸ்ரீவண்சடகோபஸ்ரீரங்கநாதஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் என்ற ப்ரஸித்த ஆசார்யன் அவதரித்தருளினர். 6

तत्रत्ये सिन्धुतीरे यतिपतिमभियन्मीनसंक्रान्तिकृत्यं
निर्वर्त्यास्वाद्य तीर्थं मधुरमतिचिरं वस्तुमैच्छं कुरङ्गे ।
सद्यः श्रीभूतपुर्यां यतिपतिरिममादिक्षदात्मान्तिकं द्राक्
आगच्छेति स्वमातुश्चरमसमयसंबोधपत्रं विलेख्य ॥

அங்கு திருக்குறுங்குடிநம்பியை மங்களாசாஸனம் செய்துகொண்டு அந்த ஸன்னிதியின் ஸமீபத்தில் ஓடிவரும் ஸிந்துநதி என்ற நதியில் நீராடி மீனஸங்க்ரமண ச்ராத்தத்தைச் செய்தருளி அவ்வாற்றங்கரையில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீபாஷ்யகாரரை ஸேவித்து அதிமதுரமான அவ்வாற்று நீரைப் பருகிக்கொண்டு அந்த ஸ்தலத்திலேயே வெகு காலம் வஸிக்கத் திருவுள்ளமாயிருக்கும்போது ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீபாஷ்யகாரரும் இவர் திருத்தாயாருக்குத் திருமேனியில் அபாடவமிருப்பதாகத் தந்தி மூலம் தெரிவித்து ஸ்ரீபெரும்பூதூருக்கு விரைந்து வரும்படி நியமித்தாயிற்று. 7

मातुः कैङ्कर्यलब्ध्यै शरणवृतिकृतौ स्वीकृतार्थे कुरङ्ग-
क्षेत्रेशेऽप्यस्तधैर्यो द्रुततरगमनेनागतोऽनुग्रहार्थम् ।
श्रीमद्रामानुजेच्छां सफलयितुमपि ख्यातभाष्यादिकोशान्
विस्मार्यापोह्य सद्योऽनयत यतिपतेरन्तिकं पूर्ण एनम् ॥

தமக்கு திருத்தாயாரின் சரம கைங்கர்யம் கிடைக்கவேண்டுமே யென்ற கவலையுடன் திருக்குறுங்குடி எம்பெருமான் ஸன்னிதியில் சரணாகதி செய்தும், அதைப் பெருமாளும் திருவுள்ளம் பற்றியிருந்தும் நம் ஸ்வாமி தைர்யமிழந்தவராய் இதுவரை ஸ்வாமி தம் வாழ்நாளில் ரயில்ப்ரயாணத்தையே கண் எடுத்துப்பாராதவராயிருந்தும் தாயாரின் அநுக்ரஹத்தின்பொருட்டு அதிவேகமாக ரயில்மார்க்கமாக எழுந்தருளுகையில், ஆபத்காலிகமான இந்த ஸ்வதர்ம த்யாகத்தையும் ஸஹியாத எம்பெருமான், தம்மிலும் சிறிய ஸ்ரீபாஷ்யாதி ஸ்ரீகோஶங்களை மறந்து இழக்கச்செய்துவிட்டு ஸ்ரீ பாஷ்யகாரரின் எண்ணங்களைத் தலைக்கட்டுவிக்கவேண்டி, ஊருக்கு எழுந்தருளும்படி செய்தாயிற்று. மார்க்கத்தில் உபவாஸத்து

டனேயேயிருந்து ஊருக்கு எழுந்தளியதும் ப்ரஸித்த நியமித்தத்திற்கு ப்ரஸித்த ப்ராயச்சித்தத்தைச் செய்தருளியாயிற்று. 8

दासेनास्मिन्यतीन्द्रे प्रसदनविधिना प्रार्थितेऽनेक मासान्
कश्चिच्छ्रीभाष्यकोशं सविधमुपनयन्नन्दनोर्जे गुरोर्मे ।
आदौ जन्मोत्सवानां निजकरनिहितं दापयित्वासमग्रं
भाष्यञ्चाध्यापयन्मामखिलमवसितौ पर्यवासाययच्च ॥

காணமற்போன ஸ்ரீபாஷ்யாதி ஸ்ரீகோசங்களைத் தமக்குப் ப்ரஸாதிக்கும்படி ஸ்ரீபாஷ்யகாரர்ஸன்னிதியில் அநேகம்தரம் ப்ரார்த்தித்தாயிற்று. இருந்தும் கிடையாமையாலுமடுத்த நந்தந ஹு கார்த்திகை மாதத்தில் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திற்கு ஸ்ரீபாஷ்யபாராயணம் செய்வதற்கு ஸ்ரீகோஶமில்லாததாலும் வருந்தும்ஸமயம் அந்த திருநக்ஷத்ரோத்ஸவாரம்ப தினத்தில் யாரோ ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசமொன்றை ஸ்வாமியின் திருக்கைகளில் ஸமர்ப்பிக்க, ஸ்வாமியும் அதிஸந்துஷ்டராய் அன்றைக்கே ஸேவாகாலம் தொடங்கி ஸ்ரீபாஷ்யபாராயணமும் பத்து தினங்களில் செய்து உத்தராஷாட திருநக்ஷத்ரதினம் ஸமாபனமும் செய்தாயிற்று. 9

गोदावच्छ्रीशमेनं यतिनृपतिमहं मार्गशीर्षेऽथ मासे
त्रिंशत् श्लोक्या प्रसाद्य श्रुतिशिखरगुरोः सूक्तिसुस्निग्धभावम् ।
अन्यस्मिन्मार्गशीर्षे द्रमिडनिगमचूडावसाने शठारि
प्रादुर्भावे यतीन्द्रान्निजजनमुखतस्तामगृह्णां सटीकाम् ॥

இது ஸ்ரீபாஷ்யகாரரின் அனுக்ரஹத்தால் என்றே எண்ணி க்ருதஜ்ஞரான நம் ஸ்ரீ ஸ்வாமி அடுத்த மார்கழி மாதத்தில்; ஸ்ரீ ஆண்டாள் எம்பெருமான் விஷயத்தில் ஸுப்ரபாதமாகத் திருப்பாவை யருளிச்செய்த க்ரமத்தில் ஸ்ரீ தேசிகனியற்றிய கோதாஸ்துதியை அடியொற்றி ஸ்ரீபாஷ்யகாரஸுப்ரபாதம் (**श्रीभाष्यकारसुप्रभातम्**) என்று ஒரு ஸ்தோத்ரத்தை அருளிச்செய்து ப்ரதிதினம் அதை அநுஸந்தித்து வரலாயிற்று. அதற்கு அடுத்த விஜய ஹு மார்கழிமாதத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸன்னிதியில் பகல்பத்து இராப்பத்து சாற்றுமுறை முடிந்து ஆழ்வாரும் திருவடிதொழுது மறுபடி லோகஸம்ரக்ஷணார்த்தமாக எழுந்தருளும்படி ப்ரார்த்திக்கப்பட்டு எழுந்தருளியஸமயத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருவாராயிரப்படியுடன்கூடிய திருவாய்மொழி ஸ்ரீகோஶத்தை நம் ஸ்ரீ ஸ்வாமியிடம் ஸமர்ப்பிக்க அதை ஸ்வாமியும் எம்பெருமானாருடைய அநுக்ரஹமெனவே நினைத்து ஸ்வீகரித்தாயிற்று. 10

ख्यातादाचार्यवंश्यात् द्रमिडनिगमचूडादिमप्यध्यगीषि
ह्यूर्ध्वेऽब्दे तूर्जहस्ते वरदनियमनादन्त्यभिक्षोर्गुरोर्मे ।
मित्रादैकान्त्यनिष्ठादिषु शठरिपुयोगीन्द्र पादाश्रयाच्छ्री
काञ्चीपूर्णान्तिकस्थाद्यदिपतिदयया प्रेपमन्त्रं ह्यगृह्णाम् ॥

இப்படி ஸ்ரீ பாஷ்யகாரர் மூலம் பெற்ற திருவாறுயிரப்படியை ஆசார்ய முகமாக ஸேவிக்கவேண்டுமென்று அவர் நியமனமெனக் கருதி அடுத்ததை மாதத்தில் அநத்யயனம் நீங்கினவுடன், தமக்கு ஆசார்ய குலோத்பன்னராயும், பகவத் விஷயத்தில் அதிப்ரவீணரா யும் திருக்கச்சி நம்பியின் அவதார ஸ்தலமான பூவிருந்தவல்லியில் வஸிப்பவரும், தமக்கு ஸதீர்த்தருமாய் வயோவ்ருத்தராயும், ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கருக்கு ஸௌஹ்ருத்தா யும், ஸ்ரீ சடகோபய தீந்த்ர மஹாதேசிகன் திருவடியுமாய் இருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவா சார்யர் என்ற ஸ்வாமியிடம் பூவிருந்தவல்லியில் எழுந்தருளியிருந்து திருவாறுயிரப்படியை பூர்ணமாக காலக்ஷேபம் செய்தாயிற்று. பின் சில காலம் பெருமாள் கோயிலில் எழுந்தருளி யிருந்து அடுத்த துர்முகிஹு கார்த்திகை மாதத்தில் ஹஸ்த நக்ஷத்ரத்தில் ஸ்ரீ தேவப் பெருமாள் நியமனம் பெற்று, தமக்கு பகவத் விஷயாசார்யனுன ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவா சார்ய ஸ்வாமி முமூர்ஷுவாய் பரமபதம் எழுந்தருளத் திருவுள்ளமாயிருப்பதை அறிந்து அங்கே எழுந்தருளி அந்த ஸ்வாமிக்கு ஆபத்ஸன்யாஸத்தைச் செய்து வைத்து தாமும் அந்த ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்யகாரரின் அருளால் ப்ரேஷமந்த்ரோபதேசம் செய்துகொண்டு காஷாயமும் பெற்றுக்கொண்டு அந்த ஸ்வாமி பரமபதம் எழுந்தருளின பின் அவருடைய சரமகைங்கர்யங்களைப் பூர்த்தி செய்துவிட்டு மார்கழி மாதத்தில் ஸ்ரீபெரும்பூதூர் எழுந் தருளலாயிற்று. 11

सोऽयं रामानुजार्यः शठरिपुफणितेरन्त्य पङ्क्तेरधीतौ
स्वप्ने श्रीवण्शठारेर्महितमठगतः श्रीमहाभूतपुर्याम् ।
स्वाख्यप्रव्राजकात्मा तमिमसुपगतं दासमुद्वीक्ष्य सोऽयं
सद्योभावी परिव्राट् स्थिर इति वचसा सादरं ह्यन्वगृह्णात् ॥

அதே மார்கழி மாதத்தில் ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸன்னிதியில் இராப்பத்து உத்ஸவம் சாற்றுமுறை முடிந்ததும், தம்முடைய ஸ்வப்னத்தில் ஸ்ரீ பாஷ்ய காரர் ஒரு ஸன்யாஸியாக அஹோபில மடத்தில் எழுந்தருளியிருந்ததாகவும் தாம் அவரை ஸேவிக்கப்போனபோது அவர் தம்மைப் பார்த்து **स्थिरपरिव्राट् भव** (நல்ல ஸன்யாஸியாவீர்) என்று அநுக்ரஹித்ததாகவும் கண்டு ஸந்தோஷத்துடன் எழுந்தருளியிருந்தார். 12

इत्थं श्रीवण्शठारिः शठमथनमुनेः पूर्णकारुण्यपात्रं
दासं कृत्वा स रामानुजमुनिमुखतः श्रीमहाभूतपुर्याम् ।
आर्द्रातारोत्सवान्ते मिथुनजुषि रवौ हेमलम्बाह्वयाब्दे
प्रव्रज्यामादिशन्मे यतिपतिविधृतं प्राप्य काषायमेकम् ॥

இப்படி ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் தம்மை ஆழ்வாருடைய பூர்ணகிருபைக்குப்பாத்ரமாக்கி பின் ஸ்ரீ பெரும்பூதூரில் ஸ்ரீபாஷ்யகாரரின் சைத்ரோத்ஸ வம் முடிந்ததும் ஹேம(வி)ளம்பிஹு ஆனிமீ ஸ்ரீபாஷ்யகாரர்சாற்றிக்கொண்டிருந்த காஷா யமொன்றை ஸ்ரீ பாஷ்யகாரர் ஸன்னிதி ஆராதகர் மூலமாகக் கொடுத்து ஸன்யாஸம் நடக் கட்டும் என்று அநுக்ரஹிக்க நம் ஸ்வாமியும் அதைப் பெற்றுக்கொண்டு இதுவும் ஒரு பாக்ய மிருந்தபடி என்று ஸந்துஷ்டரானுர் 13

इत्थं रामानुजार्यान्नियमनमधियन् किंगृहेशस्य धाम
प्राप्य प्रार्थ्याभ्यनुज्ञां शिरसि दधदहं सद्य आषाढमासे ।
पूर्णायां सौम्यघस्रे गुरुजननपराषाढ ऋक्षे गुरूणां
सिद्धिस्थाने तदाज्ञां मनसि विरचयन् प्राव्रजं श्रीशवृद्ध्यै ॥

இவ்வாறு ஸ்ரீபாஷ்யகாரர் நியமனம் பெற்று திருவெவ்வுளூர் எழுந்தருளி ஹேம (வி)ளம்பிஞு ஆடிமீ பூர்ணிமை புதவாரம் தம் ஆசார்யனை ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கருடைய அவதார நக்ஷத்ரமான உத்தராஷாடத்தில் அம்மஹாதேசிகனின் ப்ருந்தாவனத்திற்கு ஸமீபத்திலிருக்கும் கண்ணன் ஸன்னிதியில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய நியமனத்தை மனதிற்கொண்டு ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் ஸம்பத்தான ஸ்ரீசடகோஸ்ரீ தழைத்தோங்கத் திருவுள்ளமாய் ஸன்யாஸம் செய்துகொள்ளலாயிற்று. 14

स्वामिन्किङ्गेहधामन्! तव पदकमले चापलाल्लोलुपं मां
नैवब्रूषेऽनुगृह्णाम्यहमिति कृपया मेदुरां सादरोक्तिम् ।
किं नाभिज्ञायते तन्निजकरकमलोपद्रवे द्राग्विषादं
संसार्येमं जनं प्राक् सुदृढमिव करौ [1]संस्करिष्यस्यमूत्वम् ॥

இங்கிருந்து மூன்று சுலோகங்களால் ஸ்ரீ வீரராகவனிடம் அநுஜ்ஞை ப்ரார்த்திக்கப்படுகிறது— ப்ரபோ! எவ்வுள் கிடந்தானே! உம்முடைய திருவடித்தாமரைகளில் சபலனாயிருந்து ஆசை வைத்த அடியேனை "இதோ அநுக்ரஹிக்கிறேன்" என்று அருள் தோய்ந்த ஒரு சிறுச் சொல்லைச் சொல்லவில்லையே? முன் ஒரு ஸமயம் உம்முடைய திருக்கைகளில் உபத்ரவம் நேர்ந்தபோது உடக்குண்டான துக்கத்தை தாஸனுக்கு அறிவித்து உம்முடைய திருக்கைகளை முன்போல் த்ருடமாகச் செய்து வைத்துக்கொண்டதை இப்போது நீர் நினைக்கின்றீரோ? 15

सुप्तं स्वप्ने कदाचित्त्वमिममुपगतं दासमुद्वीक्ष्य हस्ता-
वुद्यम्योत्थातुकामस्तदशकनवशादुच्छ्वसन् क्लेशभूम्ना ।
आनीयेमं सुशिल्पे निपुणमिह करौ कारयेतेति भृत्यान्
आहूयोद्घोषयन्स्वं सपदि जनमिमं घोषयामासिथाहो ॥

அதாவது— ஒரு ஸமயம் ஸ்ரீகளத்தூர் அழகிய சிங்கரின் ஆஸ்தான நிர்வாஹ காலத்தில் நம் ஸ்வாமி ஸ்ரீகார்யகைங்கர்யம் பார்த்து வரும் ஸமயம் ஒரு நாள் ராத்திரி நித்ரையில் இருக்கும் போது ஸ்வப்னத்தில், நம் ஸ்வாமி வீரராகவனை ஸேவிக்க எழுந்தருளினதாயும் அப்போது ஸ்ரீ வீரராகவனுடைய த்ருவபேரத்தில் வலது திருக்கையில் கொஞ்சம் சைதில்யம் ஏற்பட்டு பெருமாள் கையை ஊன்றி எழுந்திருக்க முயன்றும் எழுந்திருக்கமுடியாமலிருக்கவே பெருமூச்சு விட்டுக்கொண்டு நம் ஸ்வாமியை கடாக்ஷித்து "நாம் இப்படி நோயால் வருந்தலாமா? நல்ல வைத்யனைக்கொண்டு குணப்படுத்தலாகாதா?" என்று கைங்கர்ய பரர்களைப் பார்த்து உத்கோஷித்ததாயும் அந்த கோஷத்தைக் கேட்டு நம் ஸ்வாமியும் அவ்விதமே அழகிய சிங்கர் ஸன்னிதியில் உத்கோஷிக்கவும் கண்டாராம். 16

---

1 **संस्करिष्यसि** இங்கு இறந்தகாலவினைச் சொல்லிற்கு பதில் எதிர்காலமாக உபயோகித்தது **अभिज्ञावचने लृट्** என்ற விசேஷவிதியாலாகும்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

14-5-55 ராத்ரி மாயவரத்திலிருந்து புறப்பட்டு 12 மைலுள்ள ஆடுதுறை எழுந்தருளினர். 15-5-55 அன்று அவ்வூர் வாஸிகளான ஸ்ரீ குப்புஸாமி அய்யங்கார் பார்யையும் அவர் ஸ்வீகார குமாரரும் ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 6 மைலுள்ள திருவெள்ளியங்குடிக்கெழுந்தருளினர். 16-5-55ல் புத்தூர் குத்தகைதார்களும், 17-5-55ல் பட்டா மணியம் ஸ்ரீ T V. க்ருஷ்ணமாசாரியரும் ஆராதித்தார்கள். அன்று கோயில் பட்டாசாரியர் முதலியோர் இங்கு கோயில்கொண்ட கோலவில்லிராமனை ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளப்படிக்கு நிச்சங்கமாக மங்களாசாஸனம் செய்யலாமென்று விண்ணப்பித்து மறுதினம் அரவணை முதலிய ப்ரஸாதங்களுடன் ஆச்ரமத்திற்கு வந்து மங்களாசாஸனம் செய்தருளவேணுமென ப்ரார்த்திக்க ஸ்ரீ அழகிய சிங்கரும் ஸகல பிருதுகளுடன் கோயிலுக்கெழுந்தருளினர். த்வஜஸ்தம்பத்தின் அருகில் ஸ்ரீஸடாரி முன்னிலையாக ஸகல மரியாதைகளையும் நடத்தி கோயிலுக்குள்ளெழுந்தருளப் பண்ணினர்கள். பிறகு பெருமாளையும் தாயாரையும் மங்களாசாஸனம் பண்ணி பட்டும் ஸமர்ப்பித்தாயிற்று. வழக்கப்போல் ஸகலமரியாதைகளும் நடந்தன 22-5-55ல் திருமங்கை மன்னன் மாஸ திருநக்ஷத்ரத்தை யுத்தேசித்து ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமனத்தின் பேரில் விசேஷ தளிகைகள் விட்டு அன்று அபிகமனாராதனம் நடந்ததும் கோயிலாரின் ப்ரார்த்தனையின் பேரில் கோயிலுக்கெழுந்தருளி நம் ஸன்னிதியில் ப்ரதிதினம் நடப்பது போல பசு, யானை, குதிரைகள், முன்னே நிற்க, ஸ்ரீ அழகிய சிங்கர் ஸுப்ரபாதம் துடங்கி ஸாதிக்க, விச்வரூபம் நடந்தது. பிறகு ஆழ்வார் ஸன்னிதி எதிரில் திருப்பல்லாண்டு துடங்கி ஆழ்வார் கோஷ்டியில் எழுந்தருளியிருந்தாயிற்று. சேவை முடிவதற்குள் பட்டாசார் திருவாராதனம் செய்து முடித்தார். சேவையான பிறகு சாற்றுமுறை தீர்த்த வினியோக கோஷ்டிகள் நடந்தன. பிறகு எல்லா ஸன்னிதியிலும் மங்களாசாஸனம் செய்து கொண்டு மடத்திற்கெழுந்தருளியாயிற்று. 25-5-55 அன்று அதேபோல் நடந்தது. 26-5-55ல் பாஷ்யகார் மாத திருநக்ஷத்ரத்தை யுத்தேசித்து கோயிலுக்கெழுந்தருளி நூற்றந்தாதி முதலியவைகளை ஸேவித்து சாற்றுமுறை தீர்த்த வினியோக கோஷ்டிகள் விசேஷமாக நடந்தன. அந்த தினங்களில் அங்கேயே காலக்ஷேப கோஷ்டியும் நடந்தது. அன்று ராத்ரி 3 மைலுள்ள அணைக்குடி எழுந்தருளினர். 25-5-55ல் அவ்வூர் மிராசுதார் ஸ்ரீமான் A. P. ராமசாமி பிள்ளை ஆராதித்தார். அன்று ராத்ரி 12 மைலுள்ள புதக்குடி எழுந்தருளினர். 26-5-55ல் அவ்வூர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யங்கார்; ஸ்ரீரங்கநாதய்யங்கார், ஸ்ரீக்ருஷ்ணசாமி அய்யங்கார் ஆராதித்தார்கள். அன்றிரவு 12 மைலுள்ள நன்னிலம் எழுந்தருளியாயிற்று. 27-5-55ல் அவ்வூர் கணக்குப்பிள்ளை ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யங்கார், ஸ்ரீராஜகோபாலய்யங்கார், ஸ்ரீ சௌரி ராஜய்யங்கார் முதலியவர்கள் ஆராதித்தார்கள். அங்கிருந்து 13 மைலுள்ள ஆமூர் எழுந்தருளினர். 28-5-55ல் மிராசுதார் ஸ்ரீ V. ரங்காசார் ஆராதித்தார். அன்று ராத்ரி 3 மைலுள்ள கீழ் தஞ்சாவூர் எழுந்தருளினர். 29-5-55ல் அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 4 மைலுள்ள திருக்கண்ணபுரமெழுந்தருளினர். கோயில் துறையார் ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளப்படிக்கு நிச்சங்கமாக மங்களாசாஸனம் பண்ணலாமென விஜ்ஞாபித்து அரவணை முதலிய ப்ரஸாதங்களுடன் ஆச்ரமம் சேர்ந்து ஸ்ரீ அழகிய சிங்கரை சௌரிராஜனை மங்களாசாஸனம் பண்ண ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரும் மடத்திலிருந்து ஸகல பிருதுகளுடனும் கோயிலுக்கெழுந்தருள, கோயிலார் த்வஜ

ஸ்தம்பத்தின் அருகில் ஸ்ரீ ஶடாரி முன்னிலையாக ஸகல மரியாதைகளையும் செய்து எதிர்கொள்ள ஸ்ரீசௌரிராஜன், தாயார், ஆழ்வார் முதலானவர்களை மங்களாசாஸனம் பண்ணிபட்டும் உபஹாரங்களும் ஸமர்ப்பித்து ஸகலமரியாதைகளையும் பெற்று மடத்திற்கெழுந்தருளினர். அன்று ராத்ரி சேஷ வாஹனத்தில் எழுந்தருளின சௌரிராஜனை கோயிலாரின் ப்ரார்தனைக்கிணங்க மடத்து வாசலில் மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. ஸகல மரியாதைகளும் நடந்தன. அன்று ராத்ரி 8 மைலுள்ள நன்னிலம் எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் ச்ரத்தையாக ஆராதித்தார்கள். அன்று ராத்ரி புதுக்குடிக்கு எழுந்தருளினர். 1—6—55 2-6-55 இரண்டு தினங்களிலும் அவ்வூர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யங்கார், ஸ்ரீ ரங்கநாதய்யங்கார் முதலியவர்கள் ஆராதித்தார்கள். அங்கு ஆதனூர் வாசிகள் வந்து ஆதனூரில் ப்ரஹ்மோத்ஸவத்துக்கு மங்களாசாஸனம் செய்தருள எழுந்தருள வேணுமென ப்ரார்திக்க அன்று ராத்ரி 15 மைலுள்ள ஆதனூரெழுந்தருளியாயிற்று. நம்மாழ்வார் திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு முன்னதாகவே திருவாய்மொழி ஸேவை கோஷ்டி தொடங்கி 3-6-55 அன்று சாற்றுமுறை வெகு விமரிசையாக நடந்தது. நம் ஸன்னிதிக்கு சொந்தமான ஆதனூர் தேவஸ்தானத்தில் நடந்து வரும் ப்ரம்மோத்ஸவத்தில் 8-ம் நாள் காலை வெண்ணைத்தாழியலங்காரத்தில் பெருமாளை மங்களாசாஸனம் செய்தாயிற்று. புறப்பாட்டின்போது இரண்டு வேளைகளிலும் ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்தின் பேரில் ஸ்ரீ தேசிகனும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனும் பெருமாளுடன் எழுந்தருளினர்கள். அன்று ஸ்வாதி திருமஞ்சனமும் நடந்தது. ஸ்வாதியையுத்தேசித்து நரஸிம்மபுரம் ப்ருந்தாவனத்திலிருந்து 25, 30, பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர்களை ஸ்ரீ அழகிய சிங்கரின் நியமனத்தின் பேரில் எழுந்தருளப் பண்ணி அருளப்பாடிட்டு மரியாதைகளைப் பண்ணி வைத்து கோஷ்டி வெகு விமரிசையாக நடத்தப்பட்டது. ஷை அழகிய சிங்கர்களை ப்ருந்தாவனத்திற்கு ஸாயங்காலம் 4 மணிக்கெழுந்தருளப் பண்ணும்போது ஸ்ரீ அழகிய சிங்கரும் அநுயாத்ரையாக வெழுந்தருளி ப்ருந்தாவனத்திலுள்ள 25, 26, 30, 37, 38, ஸ்ரீ அழகிய சிங்கர்களை க்ரமமாக மங்களாசாஸனம் பண்ணி ஸ்ரீ அஹோபிலமடம் ஆதீனத்தைச் சேர்ந்த புள்ளபூதங்குடி வல்வில்லி ராமன் ஸன்னிதிக்கு ஸகல பிருதுகளுடனும் எழுந்தருளினர். கோயிலதிகாரிகள் தோரடியிலேயே ஸ்ரீ ஶடாரி அரவணை முதலிய மரியாதைகளுடன் வரவேற்றார்கள். ஸகல மரியாதைகளுடனும் பெருமாளையும், தாயாரையும், ஆழ்வார் ஆசாரியானையும் மங்களாசாஸனம் செய்து கொண்டு பிறகு அங்கே செய்ய வேண்டிய ரிப்பேர்களையும், நரஸிம்மபுரத்தில் நடக்கவேண்டிய ரிப்பேர்களையும் நேரில் கடாக்ஷித்து ஸம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவை விஷயமாக நியமனம் ஸாதித்துவிட்டு ஸகல பிருதுகளுடனும் ஆச்ரமமெழுந்தருளியாயிற்று. சனிக்கிழமை 4-6-55 அன்று ஆதனூர் ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்தின் பேரில் வட திருக்காவேரியில் தீர்த்தவாரி உத்ஸவம் நடந்தது.

ஸ்ரீ அழகிய சிங்கரும் பரிஜனபரிச்சதங்களுடன் அநுயாத்ரையாக வெழுந்தருளி **देवेन सह मज्जनं** என்பதைத் தாம் அநுஷ்டித்தும், சிஷ்ய கோடிகளுக்கும் அந்த பாக்யம் கிட்டும்படியனுக்ரஹித்தாயிற்று. அது சமயம் திருக்குடந்தை முதலியவிடங்களிலிருந்து வந்திருந்தவர்களெல்லாரும் 30 வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீரங்கநாதனது ப்ரஹ்மோத்ஸவத்தை தாங்கள் ஸேவிக்க நேர்ந்ததும் வட திருக்காவேரியில் ஸ்ரீ அழகிய சிங்கருடன் அவப்ருத ஸ்நானம் கிடைத்ததும் ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹவிசேஷத்தினால்தான் என்று மிகவும் ஆநந்த பரிசரானார்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவிலேயே ஸங்கல்பம் வரையில் ஸஞ்சாரம் நீடித்திருக்கும் பக்ஷத்தில் ஸங்கல்பத்தை நரஸிம்ஹபுரத்தில் நடத்தலாமென ஸ்ரீ அழகிய சிங்கர் முன்னர் திருவுள்ளம் பற்றியாயிருந்தது. இப்போது நெடுந்தெருவார் பன்முறை வந்து ஸங்கல்ப மஹோத்

ஸ்ரீ:

"அம்புயத்தாளை யணைந்த ஆயிரந்தோளாளரி"

கைம்மாறு கருதாத காளமேகம் நாடெங்குந் திரிந்து அனைத்துயிர்க்கும் பிராணதாரமான மழையைப் பொழிவதுபோல், பரம புருஷன் பாதம் பட்ட இடமெல்லாம் தம் பொற்பாதங்களால் நடந்துசென்று செல்லச் சொல்லமுதத்தை மாரியாகப்பெய்து அனைவரையும் வாழவைக்கும் பரமோபகாரியான அருள்மாரி என்று புகழ்பெற்ற கலியன் சிங்கவேழ் குன்றமென்னும் அஹோபில க்ஷேத்திரத்திற் கெழுந்தருளி மங்களா சாஸனம் செய்கிறார். அங்கண்ஞால மஞ்சவும், இரிந்து வானோர் கலங்கியோடவும், மூவுலகும் பிறவும் அனைத்து மஞ்சவும், ஓர் ஒப்பற்ற ஆளரியின் னுருவுகொண்டு கொலைக்கையாளனாகிய அவுணன் நெஞ்சம் பிளக்கும் வியாஜமாக அன்று திருவவதாரம் செய்தருளிய எம்பெருமான்; ஸர்வசக்தனும், ஸர்வாந்தர்யாமியும், ஸர்வேசுவரனுமாகிய தன்னை என்றும் யாவரும் கண்ணாரக்கண்டு கைகளாரத்தொழுது, வாயர வாழ்த்தி யுய்யவே திருவுள்ளத்தில் கொண்டு அர்ச்சா ரூபங்கொண்டு அங்கே எழுந்தருளி யிருப்பதைக் கண்டு நெஞ்சுருகிய கலிகன்றி அப்பரம புருஷன் ஆனந்தஸ்வரூபனாகவும் மாலோலனாகவும் எழுந்தளியிருப்பதற்கேற்ற பாக்கியம்பெற்ற அந்தஸ்தலத்தின் மாண்பையும், அருமையையும் அவ்வெம்பெருமானோடு வுருசேரப்பாடி யனுபவிக்கிறார். அப்பொழுது அங்கே பிரமன் சிவன் முதலிய தேவர்களெல்லாம் வந்து குழுமிச் சிங்கப் பிரானை நாத்தழும்பத்தொழுது ஏத்துதலையும் காண்கிறார். அதைக்கண்டவர், உடனே இப்படிப்பட்ட ஸ்தலத்துக்கு வரவேண்டுமென்னும் புண்ணியவெண்ணங்கொண்ட தமது மனதைக் கூவியும், அந்தரங்கர்களான—அதாவது தம் மனத்தோடு பொருந்திய—பாகவதர்களைக் கூவியும் அந்த வெம்பெருமானை வணங்குவோமாக என்கிறார். அப்பொழுது, மூவுலகும் பிறவும் அனைத்து மஞ்சும் பெருமானை நாம் வணங்கினல் அவன் நமக்காக ஏது அருள் செய்வான்? சுமுகமாக இருக்கவேண்டுமல்லவோ சரண்யன்? ஈசனும் நான்முகனுமே நெருங்குவதற்கும் மிக அஞ்சி நாத்தழுதழுக்க நின்று ஏத்துகிறார்களே! இவனை நாம் எப்படி நெருங்குவது? எப்படி யனுபவிப்பது! என்று அந்த பாகவதர்களும் சங்கிப்பதாகக் குறிப்பினல் கண்ட கலியன் அதற்கும் ஓர் ஸமாதானம் அருளிச் செய்கிறார். அனைத்தும் அஞ்சினல் என்ன? அஞ்சவேண்டியவைகளுக்கு அஞ்சுதல் அறிவுடையோர் தொழிலல்லவா? இவ்வுலகினில் அவனதருளால் பிறந்திருக்கும் நமக்கு ஸர்வவிதபந்துவும், ஸ்வாமியும், துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்வதற்கே அவதரித்தவருமான அந்த மஹா புருஷனிடம் அறிந்தோ அறியாமலோ அபசாரம் நேராதிருக்கவேண்டுமென்று பயம் இருக்க வேண்டுவது நியாயம்தானே. அப்படி இருப்பினும் அவனே நம்து ஸ்வாமியல்லவா? ரக்ஷகன் அவனொருவனேயல்லவா? பயத்துடனும் பக்தியுடனும் அவனை நெருங்கித்துதித்து வணங்குதல் முறையேயல்லவா? அவன் யாவருக்குமுள்ளே உறையவனல்லவா? உள்ளே நிரந்தரமாக உறைபவனிடம் பயந்து அவனை விட்டோடுதல் கூடுமோ? ஆதலின் அவன் உள்ளே உறையும் பெருமை பெற்ற நெஞ்சே நீயே நல்ல நெஞ்சு. எனது அந்தரங்கர்களே நீங்களே மிக மிக நல்லவர்கள். நன்மையைச்

ஸவபத்தை தங்களூரிலேயே நடததித்தர வேணுமென ப்ரார்த்தித்ததின் பேரில் அங்கேயே நடத்தத் திருவுள்ளம் பற்றியாயிருக்கிறது. 8–6–55ல் காரைக்குடி ஸ்ரீ நரஸிம்மய்யங்கார் பெரிய திருமஞ்சனம் நடத்தி வைத்தார்.

இன்னும் 10 தினங்கள் அதாவது காவேரியில் ஜலம் வருகிற வரையில் ஆதனூரிலேயே எழுந்தருளியிருக்கும் படியாயிருக்கும்.

(தொடரும்)

சொன்னால் அவசியம் கேட்டு அதன்படி நடக்கும் ஸ்வபாம் உள்ளவர்கள் நீங்கள். அந்த வெம்பெருமானும் மிக மிக நல்லவன். தனது அடியார்களுக்காகவே தான் அவதரித்து அளவற்ற லீலா விநோதங்களைப் புரிபவன். அவர்களுடைய ஸத்யத்தைக் காக்கவேண்டித் தனது ஸத்யத்தையும் விடக்கூடியவன். ஆதலின் அவன் நமது பெருமான் நமது சொத்து அவன். நாமும் அவனது உடைமை. ஆதலின் அவனைத் தொழுவோம் வாரீர் என்கிறார்.

அவ்வளவிலும் பூரணமாகத்தொழ ஈடுபடாமல் பயத்துடன் அவனது திருமேனியைப் பார்த்துக்கொண்டே அவர்கள் நிற்கிறார்கள். 'பொன் பெயரோனை வெருவ அங்கவனை மணைந்திட்டு ஆயிரந்தோளெழுந்தாட' என்கின்றபடியே அவுணனைக்கொன்றபின்பும்கூட அவனைக் கொல்லும் நிமித்தமாகக்கொண்ட அனேக புஜங்களுடன் எழுந்தருளியிருக்கும் அத்திருமேனியையும் அவனுடைய குதூகலத்தினும் இவர்கள் பயத்தினும் அநந்தமாகத் தோன்றும் அப்புஜங்களையும் பார்த்தார், கலியன். அவைகளே இவர்களது பயத்திற்கு காரணம் என்பதையும் அறிந்தார் கலியன். அவ்வெம்பெருமானது கோபாவேசம் தற்போது அடங்கிவிட்டமையையும், அருளே வடிவான பிராட்டி கூடிக்குலவி யிருப்பதையும், அவன் கோபம் தணிந்த காரணத்தையும், அஸுர நிரஸனம் ஆகியவுடனே அத்தனை கைகளையும் அவன் மறைத்துக் கொள்ளாத காரணத்தையும், ஒருங்கே யருளிச் செய்கிறார் கலியன். வீரலக்ஷ்மி தழுவிப் படிந்திருக்கும் அத்திருத்தோள்கள் குளிர்ந்த காலதத்தில் நித்யவாஸம் செய்யும் தண்ணளியுடைய பெரிய பிராட்டியார்கண்டு ஆநந்தத்துடன் ஆலிங்கனம் செய்வதற்காகவே உடனே மறைந்துவிடாமல் நின்றன. அவள் அணைத்த பிறகே கோலாஹலத்துடனும் கோபாவேசத்துடனும் பொங்கியெழுந்தாடிய தோள்கள் சாந்தியடைந்து மிக அமைதியுடன் நின்றன. எல்லாராலும் பக்தியுடன் மிக விரும்பப்படுபவளும் பரம புருஷனுடைய அத்யந்த ப்ரீதிக்குப் பாத்திரமானவளுமான பெரிய பிராட்டியாரைக்கரை புரண்ட அன்புடன் அணைப்பதற்காகவே ஆயிரந்தோள்களுடன் நின்றான் அந்த ஆனந்தஸ்வரூபன். அதுவும் ஸகல ஆயுதங்களையும் எறிந்துவிட்டு ஆயிரந்தோள்களாலும் அப்பிராட்டியை ஆலிங்கனம்செய்து கொள்ளவே நின்றான். செய்துகொண்ட பிறகு அமைந்து நின்றான். அதன் பிறகுங்கூட அலர்மேல் மங்கையின் திருமேனிஸ்பர்சம் பட்ட திருத்தோள்களைச் சிறிதும் மறைக்க நினையாமல் அவ்வளவு தோள்களும் தோன்றவே ஆனந்தத்துடன் நிற்கிறான் என்று சொல்லி மகிழ்கிறார் கலியன். பின்னும் அவனை வணங்காமல் போனாலும் அவனிருக்கும் ஸ்தலத்தையாயினும் வணங்குவீர். அந்த ஸ்தலமும் மிகப் பெருமை பொருந்தியதே' என்கிறார். அம்மலையிலே எம்பெருமான் கோயிலுக்குச் செல்லும் வழியில் நெல்லி மரங்கள் எங்கும் அடர்ந்து வளர்வதனால் அவைகளின் வேர்கள் இறங்குகையில் கற்களை உடைத்துக்கொண்டே இறங்குகின்றன. அவைகளின் மிகச் சிறிய இலைகள் வழி எங்கும் விழுந்து நிறைந்திருக்கின்றன. எம்பெருமான் கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின்மேல் வெயில் உறைக்காமலும் அவர்களுடைய திருவடிகளில் கற்கள் உறுத்தாமலும் காக்கின்றன அம்மரங்கள். கற்களைப் பொடிபடுக்கும் அம்மரங்களுக்கு பாகவதர்கள் விஷயத்தில் இருக்கும் இளகிய மனப்பண்பு தான் என்னே? அவைகளும் அப்பரமனையே அனுகரிக்கின்றனவே! என்னே அத்திவ்ய தேசத்தின் பெருமை? அத்துடன் அவ்வழிகளில் அமைந்த பனைமரங்களின் மட்டைகள் காற்றின் அசைவினால் எப்பொழுதும் சத்தமிட்டுக் கொண்டேயிருக்கின்றன. அங்கங்கே யுள்ள சிள்வண்டுகளும் எப்பொழுதும் ஒலித்து ரீங்காரம் செய்துகொண்டே யிருக்கின்றன. (இச்சத்தங்கள் பரமனைக்காணப் போகும் பக்தர்களின் பயத்தைத்தீர்க்கும் துணைகளாக இருக்கின்றனபோலும்) என்றிப்படி அத்திவ்ய தேசத்தின் அமைப்பையும் பெருமையையும் சேர்த்தே மங்களாசாஸனம்

செய்கிறார் மங்கையர்கோன் கலியன். மேற்கண்ட அனுபவத்தையும் மங்களாசாஸனத்தையும் தன்னுடம் அமைந்ததுபோதுமென்று திருப்தியடைபவர் அல்ல அந்த வாட்கலியன். காலமுள்ளளவும் அடியார்கள் அனுபவித்து மகிழும் வண்ணமே ஓர் அழியாத அமுதத் தீந்தமிழ்ப் பாட்டாகச் சித்தரித்துத் தருகிறார் ஆலிநாடர். அவர் தர நினையாதிருப்பினும் அப்பாசுரங்களில்வ்யாமோஹங்கொண்ட தாமரைக் கண்ணன் பெறுமல் விடுவானே? இதோ காண்மின் அப்பாசுரமணியை—

"நல்ல நெஞ்சே நாம் தொழுதும்
நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர் புல்க நின்ற வாயிரந்தோளனிடம்
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப்
புல்லிலையார்த்து, அதர்வாய்
சில்லுசில்லென்றொல்லறாத சிங்கவேழ்
குன்றமே".

காணுந்தோறும் படிக்குந்தோறும் கேட்குந்தோறும் அனுபவிக்குந்தோறும் புதுப்புது ரஸம் பொங்கிப் பெருக்கெடுத்தோடும் கலியனுடைய அனுபவமும் அருட்கவிகளும் கிடைக்கப் பெற்ற நமது பாக்கியமே பாக்கியம். இவ்வருமையான கவிமணிகளைத் தந்தருளிய படியினாலே இத்திருமொழி முடிவில் கலியன் தம்மை 'இருந்தமிழ் நூற்புலவன்' என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார்.

குறிப்பு:— நெஞ்சு—மனம், கனம் பொருந்திய அந்தரங்கர்; நம்முடை—நம்முடைய, நமது உடமை; அல்லி மாதர் குளிர்ந்த தாமரையில் உள்ள பெரிய பிராட்டி, குளிர்ந்த மலரில் உள்ள விரும்பப்படும் பிராட்டி; (வீரலக்ஷ்மியுமாம்) புல்க நின்ற- அணைவதற்காகநின்ற, அணைந்த படியினால் அமைந்து நின்ற; மல்கி- பெருகி, புல்இலை- சிறிய இலை, புல்- பனைமாம்; ஆர்த்து- சப்தித்து; (இது ஆர்ந்து மல்லொற்று என்பதுண்டுவல்லொற்றாய்த் திரிந்த வ்காரமாகவும் கொள்ளத்தகும்) சில்- சிள்வண்டு (சத்தத்தையும் குறிக்கும்).

ஓர் அறிவிப்பு

ஸ்ரீமான் முகுந்தகிரி V. வரதாசாரியர் ஸ்வாமி பம்பாய் ராஜதானியில் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவிற்கு கௌரவ ஏஜெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். வழக்கம்போல் அந்த ஸ்வாமியிடம் பம்பாய் சந்தாதாரர்கள் தங்கள் சந்தாபாக்கியைச் செலுத்தும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

ஏஜெண்டின் விலாஸம்:—

M. V. வரதாசாரியர் B. A.
61. கோட்பந்தர் ரோடு,
ஜோகேஸ்வரி போஸ்டாபீஸ், பம்பாய்.

ஸ்ரீ அஹோபிலமடம் ஸஞ்சாரத்தில் ஸ்ரீ S. D. ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி நம் பத்ரிகையின் கௌரவ ஏஜெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மானேஜர்,
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா.

ஸ்ரீ:

"தீர்ப்பாரை"

உலகில் மானிடர் மாரனார் வரிவெஞ்சிலைக்கு ஆட்செய்து, மாறி மாறி பல பிறப்பும் பிறந்து இறந்து, கரையில்லாத கருமப் பெருங்கடலுள் அமிழ்ந்து வருந்தி அலைவதை உற்று நோக்கி, அவ்வாத்மாக்களையும் அந்தமில் பேரின்பத்தை அடைவிக்க வேண்டுமென்று, இயல்பாக எழுந்த பரம க்ருபையாலே, அவ்வுயிர்கள் நல்வழி தீவழிகளை நன்ருகப் பகுந்துணர்ந்து நடக்கும் விதத்தை அறிவித்தற்பொருட்டு காருண்ய ராசியான எம்பெருமான் தன் ஆஜ்ஞா ரூபமான வேதங்களை வெளியிட்டருளி, அரிய பெரிய அவ்வேதங்களின் ஆழ்ந்த மறைபொருளைச் சிற்றறிவினராகிய சேதநர் ஐயம் திரிபறத் தெள்ளிதிற் தெரிந்து கொள்ளுதற்கு (தெளியாத மறை நிலங்களைத் தெளிந்து கொள்ளும் பொருட்டு) ஆழ்வார்களை அவதரிப்பித்தருளினான். இவர்கள் ருஷிகள் போலத் தாமாக மிக முயன்று தத்வஜ்ஞானத்தைப் பெறுதலின்றி, பகவத் ப்ரஸாதத்தாலே, ஸர்வாதிகாரமாய், த்ராவிட ரூபமான ப்ரபந்த விசேஷங்களாலே ஸகலவேத வேதாந்த ரஹஸ்யத்தை ப்ரகாசிப்பிக்கையாலே அத்யந்தம் விலக்ஷணராயிருப்பார். இப்படி எம்பெருமானுடைய அபிநவ தசாவதாரங்கள்போலே அவதரித்த ஆழ்வார்களுள் நம்மாழ்வார் கூறுதற்கரிய வீறுபெறுவர். இவர் ருக்யஜுர் அதர்வணம் என்ற மூன்று வேதங்களின் ஸாரார்த்தத்தைத் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி என்ற மூன்று ப்ரபந்தங்களின் மூலமாக வெளியிட்டு, அவ்வேதங்களுள் சிறந்ததும் பகவானுடைய ஸ்வரூபமாகவேயுள்ளதுமான ஸாமவேதத்தின் தத்வப்பொருளைச் சரம ப்ரபந்தமான (பின் உரைத்ததோர்) திருவாய் மொழியால் அருளிச்செய்து அவற்றை மதுரகவிகளுக்கு உபதேசித்தருளினர்.

நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு ப்ரபந்தங்களுள் முன்னுரைத்தது திருவிருத்தம். இது ருக்வேதஸாரம். ருக்வேதம் ஸாமவேத ரூபமாகப் பரம்புமென்றும், அதுபோலவே ருக்வேதஸாரமான திருவிருத்தம் நூறுபாட்டும் ஸாமவேதஸாரமான திருவாய்மொழி ஆயிரம் பாட்டாகப் பரம்பிற்றென்றும் அபியுக்தர்களின் திருவுள்ளம். அந்த ரீதியில் வெளிவிலக்குப் பாசுரமாகிய

"சின்மொழி நோயோ கழிபெருந்
தெய்வமிந் நோயினதென்று
இன்மொழி கேட்கும் இளந்தெய்வ
மன்றிதுவே நில் நீ
என்மொழி கேண்மின் என்னம் மனை
மீர் உலகேழு முண்டான்
சொன்மொழி மாலையந் தண்ணந்
துழாய் கொண்டு சூட்டுமினே"

[திருவிருத்தம்—20]

என்பது "தீர்ப்பாரையாமினி" என்னும் பதிகமாகப் பரிணமித்ததென்று தெரியவருகிறது.

இப்பொருளும் பிற குறிப்பு வரலாறுகளும்

வாய்விட்டு வார்த்தை சொல்லமாட்டாத இளமைப் பருவம் வாய்ந்தவளும், மிதபாஷிணியும், மழலை மொழி பேசுபவளுமான இவளது (பராங்குச நாயகியினது) நோயோ, தேவாதிதேவனான எம்பெருமான் விஷயமாக உண்டானது. இந்நோய் இப்படிப்பட்டதென்று இல்லாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லக் கேட்கத்தக்க க்ஷுத்ர தெய்வத்தின் விஷயமாக வந்ததன்று. வேலாயுதத்தைக் கையிலேந்தி வெறியாட்டம் ஆடுவனே! நீ தூர விலகி நில். தாய்மார்களே? இவள் உற்ற நோயின் தன்மையை உண்மையாக அறிந்த என் வார்த்தையைக் கேளுங்கள். ஏழுலகங்களையும் ப்ரளய காலத்தில் தன் திருவயிற்றிற்

கொண்டு காத்தருளிய எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு அவன் அணிந்து கொண்டுள்ள திருத்துழாய்மாலையை இவளுக்குச் சூட்டுங்கள்.

இது இப்பாசுரத்தின் பொருள் :—

இது தோழியின் வார்த்தை. இப் பாசுரத்தில் உள்ள துறையின் விளக்கம் வருமாறு:—ஒரு பூஞ்சோலையில் ஏகாந்தமாகத் தலைமகன் (நாயகன்) களவொழுக்கத்தால் தலைமகளை (நாயகியைக்) கூடினான். பின்னர் அவளை வெளிப்படையாக மணம்செய்து கொள்ளுதற்பொருட்டு பொருள் தேடிவருவதற்காக அவளை விட்டுப் பிரிந்து, இன்னகாலத்தில் வருவேன்' என்று ஒரு காலத்தைக்குறிப்பிட்டுச் சொல்லிச் சென்றான். அந்தக் காலத்தில் அவன் வாராமற்போக, அவனது பிரிவாற்றாமையால் தலைவி உடல் மெலிந்து நிறவேறுபாடுற்று அலற்றுகிறாள். இவளது இந் நிலையைக்கண்ட செவிலித்தாய்மார் 'இவளது உடல் மெலிவுக்குக்காரணம் யாதோ? என்று கவலைப்பட்டுக்கட்டு விச்சியைக் குறி கேட்கிறார்கள். கட்டுவிச்சி, சிரார் சுளகில் சில நெற்களை எறிந்து ஆராய்ந்து, "அம்மாமாரே! இவளுக்கு முருகக் கடவுள் ஆவேசித்த தொழியவேறொன்றுமில்லை" என்கிறாள். அது கேட்ட செவிலியர் வெறியாட்டாளனை அழைப்பித்து அவனைக்கொண்டு ஆவேச மாடுவிக்க முயல, அதற்குத் தலைமைகள் உடன்படாமல் வருந்த, அந்த ஸமயத்தில் அவளது துன்பத்தின் மெய்க்காரணத்தையறிந்த தோழி, வெறியாட்டாளனாகிய வேலனையும் செவிலியரையும் நோக்கிச் சில சொற்கள் கூறி வெறி விலக்குகிற துறை இது. தலைவியின் துன்பந் தீரத் தோழி கூறும் நோயின் தன்மைகளும் சிகித்ஸைகளும் 'தீர்ப்பாரை'யில் பார்க்கக் காணலாம். 'தீர்பாரைப் பதிகம், திருவாய்மொழியில் 4-ம் பத்து, 6-ம் திருவாய்மொழியாகும்.

அவதாரிகை—ஸாந்நித்யம் பண்ணின ஸர்வேச்வரன் அந்தர்ஹிதனானையாலே, ஆழ்வாராகிய தலைவி மோஹிக்க, இதர தேவதாவேசமென்றுக்ஷுத்ரதேவதாராதநம்பண்ணுவதைப் பரிஹரித்து, 'பகவந் நாம ஸங்கீர்த்தநமும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூளும் இதற்குப் பரிஹார' மென்று ஆப்தஸகிசொல்ல, அப்படியே பரிஹாரம் பண்ண மோஹம் தீர்ந்ததை 'வெறி விலக்கு' என்னும் துறையால் அருளிச் செய்கிறார்.

கவிநிலைத் துறை

1. தீர்ப்பாரை யாமினி யெங்ஙனம்? நாடுது
மன்னைமீர்!
ஓர்ப்பாலிவ் வொண்ணுத லுற்றநன்
னோயிது தேறினோம்
போர்ப்பாகு தான் செய்தன்றைவரை
வெல்வித்த மாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கிவள் சிந்தைதுழாய்த்
திசைக் கின்றதே.

திருவாய்மொழி ப்ரபந்தம் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கணங்களுக்கும் இலக்கியமாகும். ப்ரக்ருதம் இப்பதிகம் நாடகத் தமிழாகுமாறு கூறுவோம்.

நாடக பாத்ரங்கள் :— 1. தலைவி (நாயகி)— இவள் பராங்குச நாயகி என்று சொல்லப்படும் நம்மாழ்வார். 2. மதுர பாஷிணீ:—இவள் நாயகியின் உயிர்தோழி. [மதுரபாஷிணி என்பவள் மதுரகவியாழ்வார். இவர் நம்மாழ்வார் காலத்தில் அவருடன்கூட இருந்து அநுபவித்து, அவர் அருளிய பாசுரங்களைப் பட்டோலைகொண்டு ஆழ்வாருக்கு முக்ய சிஷ்யராக இருந்ததுபற்றி இவள் ஆழ்வாரது உயிர்தோழியாய்க் கூறப்பட்டாள்.] 3. மங்கை நாயகி:—என்பது திருமங்கையாழ்வாரை. [இவர், நம்மாழ்வார் அவாவற்று வீடுபெற்ற பின்னர் அவதரித்தவர். ஆழ்வார் அருளிய நான்கு வேதஸாரமான நான்கு ப்ரபந்தங்களிலும் ப்ரவீணராய், வேதங்களுக்கு சிக்ஷா முதலிய ஆறங்கங்கள் போல், ஆறுப்ர பந்தங்கள் அருளிச்செய்தது பற்றி இவள் பராங்குச நாயகியின் மற்றொரு தோழி ஆகிறாள்.] 4. உடைய நங்கை—என்பவள் "இவனைப்பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்றாள்கொலோ!" என்று

சொல்வதற்குரிய நம்மாழ்வாரதுதாய். 5. செவிலித் தாயார்:—என்பார் நாயகிக்கு உபகாரகர்கள். 6. கட்டு விச்சி, வேலன், துணங்கையாடுவோர் என்பவர் தேவதாந்தரபரர்கள்.

ஸர்வேச்வரன் தன் அவதாரங்களைக் காட்டி மறைந்தபடியாலே ஆழ்வார் நாயகித்தன்மையடைந்து மோஹித்து ஸம்பந்தி ஸத்ருச வஸ்துக்களைப்பார்த்துக் கதறினர் 'மண்ணை இருந்து துழாவி'யில். பிறகு அவ்வெம்பெருமான் நாயகியின் மோஹம் தீரும்படி நித்தியஸூரிகளோடு ஸாந்நித்தியம் பண்ண நாயகி மங்களாசாஸநம் பண்ணிப்ரீதிபடைந்தாள் 'வீற்றிருந்தேழுலகில்'. அப்படி ஸாந்நித்யம் பண்ணின ஸர்வேஸ்வரன் அந்தர்ஹிதனாக, நாயகிமோஹித்து மூர்ச்சிக்கிறாள் 'தீர்ப்பாரை'யில்.]

இடம்: திருநகரி. காலம்: மாலை.

[நாயகி மூர்ச்சித்துக் கிடக்க, இச் செய்தி ஊரெங்கும் பரவுகிறது. உடைய நங்கை முதலிய தாய்மார்களும் பாங்கிக் கூட்டமும் அயற்சேரியிலுள்ளாரும் பரபரப்புடன் கூடுகிறார்கள்.]

உடைய நங்கை:—பாங்கிகளே! நம் பராங்குச நாயகி மூர்ச்சித்துக் கிடக்கிறாளே! காரணம் இன்னதென்று தெரியவில்லையே! இவள் மூர்சை தெளிந்து எழுவாளோ என்னவோ தெரியவில்லையே! மிக்க கவலையாயிருக்கிறதே! எவரேனும் தீர்ப்பாரை நாடிப் பரிஹரிக்க வேண்டுமே! என்செய்வேன்! [கையைப் பிசைந்துகொண்டு கண்ணீர் விடுகிறாள்.]

[பாங்கிகள் நாலுதிக்குக்களிலும் சென்று இச்செய்தியைஅறிவிக்கிறார்கள். உடனே கூட்டங் கூட்டமாய் வேறறிவார், விரகறிவார், மந்த்ர மறிவார், ஔஷதமறிவார், துணங்கை யாடுவார், கட்டுவிச்சிகள், இவர்கள் யாவரும் வந்து சூழ்ந்து, தங்கள் தங்களால் இயன்ற பரிஹாரம் செய்யத்தொடங்குகிறார்கள்.]

கட்டுவிச்சி:—அன்னைமீர்! நான் கூடை முறம் கட்டும் குறப்பெண், முக்கால வரலாறுகளையும் அறிவேன். எங்கள் மலைத் தெய்வமாகிய வேலவன் அருள்பெற்று நன்றாய்க் குறிசொல்லுவேன். இப்பெண்ணின் நோய் தீரத்தகுந்த பரிஹாரமும் செய்வேன்.

உடைய நங்கை:—அடி குறத்தி! நன்றாய்க்குறிபார்த்துச்சொல். நீ வேண்டியதெல்லாம் தருகிறேன். உனக்கு வேண்டுவதென்ன சொல்.

கட்டுவிச்சி:—என் குழந்தைதலைக்குக் கொஞ்சம் எண்ணெய்கொடு; எனக்குக் கட்டிக்கொள்ள ஒரு பழந்துணிகொடு, இவைகள் தான் எனக்கு வேண்டும். [இவைகளைக் கொணர்ந்துகொடுக்கிறாள்.]

உடைய நங்கை:—இவை போதுமன்றோ? இன்னும் என்னென்ன வேண்டும் இவள் பரிஹாரத்துக்கு? சொல்.

கட்டு விச்சி:—அம்மா! ஒரு குடம் கள். ஓர் ஆடு; ஆறுமரக்கால் கருஞ்சோறு; ஆறு மரக்கால் அரிசிசெஞ்சோறு— இவைகள் வேண்டும். இவைகள் இந்நோய்க்குமருந்தாகும்.

துணங்கையாடுவோர்:— நாங்கள் கூத்தாடிகள், எங்கள் தேவதை மகிழப் பலவகைக் கூத்துக்கள் புரிவோம். பள்ளயம் போடவேண்டும் ஓர் ஆடும் கள்ளும் இறைச்சியும் வேண்டும். எங்கள் கூத்து முடிந்து பூசை போட்டதும், உன் பெண் உயிர்பெருவாள் இவைகள் தவிர, தோற்கருவி துணைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக் கருவியாளரும் வேண்டும். இவைகளைத் தருவியுங்கள். எங்களால் இவள் உயிர் பெற்றெழுவது திண்ணம் பாருங்கள்.

[உடைய நங்கையின் ஆணையால் பரிஹாரத்துக்கு வேண்டும் பண்டங்கள் ஸித்தமாயின; பரிஹரிக்கவும் தொடங்கிவிட்டார்கள்.]

(தொடரும்)

ஸ்ரீ:

விரோத பரிஹாரம்

கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ,
புற்பாமுதலாப் புல்லெறும்பாதியொன்றின்றியே,
நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்,
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்றநாட்டுளே.

[திருவாய்மொழி 7-5-1.]

இதன் அர்த்தம் பின் வருமாறு:—

நான்முகனார்– சதுர் முகனார், நியந்த்ருத்வேந உத்க்ருஷ்டத்வத்யோதனார்த்தம் பஹு வசனம். பெற்ற– ஸ்ருஷ்டித்த, கர்மவச்யனான சதுர்முகனாலே ஸ்ருஷ்டமாய் தன் நியாம்யமுமாய் இருக்கையாலே கர்மபாரதந்த்ரமான வென்று தாத்பரியம். நாட்டுளே– ஜகத்துக்குள்ளே, இதற்கு நற்பாலுக்குய்த்தனன் என்கிறத்தோடேயன்வயம். புற்பா முதலாவென்கிறத்தை பாபுல் முதலாவென்று மாறியன்வயிப்பது. பா– பாவினவையான. பாவுகை– பரம்புகை. பூமியெல்லாம் படர்ந்தவையானவென்றபடி. புல்முதலா– தூர்வாதி த்ருணங்கள் முதலாக புல்– அதிக்ஷுத்ரங்களான, புல்லென்று க்ஷுத்ரத்திற்கும் பேர். எறும்பாதி– எறும்பு முதலாக, ஸ்தாவரங்களிற் கடையான த்ருணங்களும், ஜங்கமங்களிற் கடையான சிற்றெறும்பும் முதலாகவென்று கட்டார்த்தம். ப்ரவாஹமானது நிம்னஸ்தலத்திலே முற்பட ஓடுமாப்போலே இந்த க்ஷுத்ர ஜந்துக்கள் பக்கலிலேயிறே ஸ்ரீராமனுடைய கிருபையானது முற்பட ப்ரவஹிக்குமென்று கருத்து. இதுக்கு சராசரம் என்கிறத்தோடேயன்வயம். நற்பால்– நல்ல பிரதேசங்களையுடைத்தான பக்தி ஹேதுவான உபாயம் ஒன்று இல்லாதார்க்கும் பூமி ஸ்வபாவத்தாலே ஸ்ரீராம பக்திவர்த்தகமாயிருந்த பிரதேசங்களையுடைத்தானவென்றபடி, அயோத்தியில்– அயோத்யையில் வாழும்– வாழாநிற்கிறவையான ராமகுணானுபவத்தாலே ஸஹியாநிற்கிறவையானவென்றபடி, சராசரம் முற்றவும்–சராசரம் எல்லாவற்றையும், ஒன்றின்றியே– கர்மயோகாத்யுபாயம் ஒன்றில்லாதிருக்கச் செய்தேயும், நற்பாலுக்கு– நல்ல ஸ்வபாவத்திலே, ராம சரணாரவிந்தைகதாரக போஷக போக்யத்வம் ஆகிற நல்ல ஸ்வபாவத்திலேயென்றபடி. அங்கு இங்கு என்னுமாப் போலேபாலுக்கென்று ஸப்தம்யந்தம். உய்த்தனன்– பிரவேசிப்பித்தான், உய்க்கை– பிரவேசிப்பிக்கை– நல்ல ஸ்வபாவநிஷ்டராக்கினான் என்றபடி......ஆதலால் என்று ஒரு பதம் கூட்டிக்கொள்ளுக. கற்பார்– கற்குமவர்கள், ப்ரியஹிதங்களையனுசந்திக்கவேண்டுமென்று இச்சையுடையவர்கள் என்றபடி. இராமபிரானையல்லால்– இராமனாய் மஹோபகாரகனானவனையொழிய, மற்றும்– வேறொன்றையும், பரத்வத்தையும் அவதாரங்களையும் என்றபடி. கற்பரோ– அநுசந்திப்பரோ என்று. இவ்வர்த்தம் இப்பாசுரத்தின் வ்யாக்கியானங்களில் ஸ்ரீமத்ராமாயண ச்லோகங்களைக் கொண்டுவிசதமாகவுபபாதிக்கப்பட்டிருக்கிறது

அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி
அடலரவப்பகையேறி யசுரர்தம்மை
வென்று, இலங்குமணிநெடுந்தோள் நான்கும்தோன்ற
விண்முழுதுமெதிர்வரத்தன்தாமமேவி
சென்றினிது வீற்றிருந்தவம்மான்றன்னைத்
தில்லைநகர்த்திருச்சித்திரகூடந்தன்னுள்

என்றும் நின்ருனவனிவனென்றேத்தி நாளு
மிறைஞ்சுமினேவெப்பொழுதும்தொண்டீர் நீரே.

[பெருமாள் திருமொழி 104]

(ப-ரை) அன்று- தீர்த்தம் ப்ரஸாதித்தருளுகிறவன்று, சராசரங்களை- வைகுந்தத்து- பரமபதத்திலே, ஏற்றி- போகவிட்டு, அடல்- வலியையுடைய, அரவம்- ஸர்ப்பஜாதிக்கெல்லாம், பகையேறி- சத்ருவான பெரிய திருவடியை மேற்கொண்டு, அசுரர் தம்மை- அஸுரவர்க்கத்தை, வென்று- ஜயிக்கையாலே இலங்கு- விளங்குகிற, மணி- அழகிய, நெடும்- நீண்ட, தோள் நான்கு- நான்கு திருத்தோள்கள், தோன்ற- தோன்றவும், விண்முழுதும்- பரமபதத்திலுள்ளாரெல்லாம், எதிர் வர- எதிர்கொண்டுவர, தன்- தன்னுடைய, தாமம்- ஸ்தாநத்திலே, மேவிச்சென்று- போய்ப்புக்கு, இனிது- இனிதாக, ஸிம்ஹாஸநத்திலே, வீற்றிருந்த- தன்பெருமைதோற்ற எழுந்தருளியிருந்த, அம்மான்றன்னை- ஸர்வேச்வரனை, தில்லை நகர் திருச்சித்திரகூடந் தன்னுள்-, என்றும் நின்ருன்- நித்யவாஸம் பண்ணுகிறவனை; தொண்டீர் நீர்- அநந்யப்ரயோஜநரான நீங்கள், அவன்- அப்படிப் பட்டவன், இவன்- இப்படிப்பட்டவன், என்று ஏத்தி- என்று ஸ்துதித்து, நாளும்- நாள்தோறும், இறைஞ்சுமின்- ஆச்ரயித்து க்ருதார்த்தராகுங்கோளென்கிருர்.

கீழ்க்கண்ட திருவாய்மொழிப் பாட்டில் ஸ்ரீராமன் சராசரங்களை சதுர்முகனல் படைக்கப் பட்டும் அவன் ஆளுகைக்குட்பட்டதுமான கர்மபாரதந்த்ரமான உலகிற்கு அனுப்பினதாகவும், கீழ்க்கண்ட பெருமாள் திருமொழிப்பாசுரத்தில் அவர் அவைகளை பரமபதத்திற்கனுப்பியதாகவும் அருளிச் செய்யப்பட்டிருப்பதால் இரண்டு பாசுரங்களுக்கும் ஒன்றுக்கொன்று விரோதம் தோன்றுகிறது. இவ்விரோதம் இப் பாட்டுக்களுக்கு மூலமான ஸ்ரீராமாயணேத்தர காண்டத்தின் கதையை அதன் வியாக்கியானங்களுடன் பராமர்சிப்பதால் நீங்கிவிடுகிறது. வ்யாக்கியானங்களோடு சேர்த்து அநுஸந்திக்கப்பட்ட அக்கதை இவ்வாறு- ஸ்ரீராமன் பரலோகம் செல்லுவதற்காக ஸங்கல்பம் செய்துகொண்டு போவதாகிற மஹாப்ரஸ்தானத்தை உத்தேசித்து செய்யவேண்டிய காரியத்தை தன் பிரார்த்தனையின்படி வசிஷ்டர் செய்த பிறகு மஹாப்ரஸ்தான விதிப்படி அக்னிஹோத்ரம் முதலியவையுடனும் ஸ்ரீ பூதேவிகளுடனும் ப்ராதாக்களுடனும் புறப்பட்டு அயோத்யாவாசி சராசரங்களால் பின் தொடரப்பட்டு ஒன்றரையோசனை தூரம் சென்று ஸரயூநதியைப் பார்த்தார். அப்பொழுது பிரம்மா அவ்விடத்திற்கு வந்தார். ஸ்ரீராமன் ஸரயூநதியின் ஜலத்தையடைவதற்காகப் போகும்பொழுது பிரம்மா ஆகாசத்தில் இருந்து ஸமீபத்தில் வந்து ராகவனுக அவதரித்த ஓ விஷ்ணுவே, நீர் விஷ்ணு சரீரத்தையும் லக்ஷ்மணன் சேஷ சரீரத்தையும் பரதன் கருட சரீரத்தையும் சத்ருக்கனன் விஷ்வக்ஸேன சரீரத்தையும் எடுத்துக்கொள்ள வேணும் அல்லது விஷ்ணுவின் அவதார ஸமூகத்திற்கு இருப்பிடமான வைகுண்டத்தை அடையவேணும் என்று விண்ணப்பம் செய்ய சரீரத்துடன் தம்பிகளுடன் வைஷ்ணவ தேஜஸ்ஸை பிரவேசித்தார். பிறகு விஷ்ணு சரீரம் உள்ள ஸ்ரீராமன் பிரம்மாவைப் பார்த்து இந்த ஜனக்கூட்டங்கள் என்னிடத்தில் சிநேகத்தால் பின் தொடர்ந்து வந்திருக்கின்றன. நல்லமனதுடையவர்கள் என்னிடம் பக்தியுள்ளவர்கள். ஆகையால் எனக்குப்பிரியமானவர்கள். எனக்காக சரீரத்தை விட்டவர்கள். ஆகையால் உம்முடைய லோகம் சென்று ப்ரளயத்தில் உம்மோடுகூட மோக்ஷத்தையடைவிக்கும் லோகத்தை நீர் ஆதிவாஹிகராகையால் கொடுக்கவேணும் என்று கேட்டார். பிரம்மா அவ்வார்த்தையைக்கேட்டு உம்மிடத்தில் பக்தியுள்ள எல்லா சராசரங்களும் ஸத்ய சங்கல்பம் முதலிய குணங்களுடன் கூடியதும் பிரம்மலோகத்திற்குச் சமீபத்தில் மேலே இருப்பதுமான சந்தானலோகத்தையடைந்து

பிரம்மலோகம் வந்து அங்கே பக்தியோகத்தை அனுஷ்டித்து பக்தி யோகம் செய்த பிரம்மாவுடன் உம்முடைய லோகமான பரமபதத்தை யடையப் போகிறார்கள். ஸூர்யாதி தேவதைகள் அம்சங்களான சுக்ரீவாதிகள் அந்தந்த தேவதைகளின் ஸ்வரூபத்தையடையப் போகிறார்கள் என்று சொன்னார். பிறகு எல்லோரும் ஸந்தோஷம் உள்ளவர்களாய் கோப்ரதாரம் என்னும் தீர்த்தத்தை யடைந்து ஸரயூ நதியை அடைந்தார்கள். பிறகு ஸரயூ நதியில் மூழ்கி அப்பொழுது இருக்கும் சரீரத்தை விட்டு விமானம் ஏறி ஸந்தான லோகம் சென்றனர். இப்படி தன்னுடன் வந்த சராசரங்களை அந்தந்த இடத்திற்கனுப்பிபகவானுன தன்னுடையவரவால் ஸந்தோஷமடைந்த நித்ய ஸூரிகளுடன் பரம பதம் சென்றார் என்று இவ்விடத்தில் மஹேச தீர்த்த வ்யாக்யானத்தில் "பிதா மஹவச: ச்ருத்வா" என்பதற்கு "பிறகு தன் லோகத்தை விரும்புகிற ஜனங்களை ஸந்தானம் என்று வேறு பெயருள்ள தன் லோகத்தையடைவித்து முறைபே பரம பதத்தையடைவிக்க வேணுமென்று விருப்பமுள்ள தயாளுவான பகவான், தன் லோகத்தைக் காட்டிலும் உத்தமமான லோகத்தை அடைவித்தார் என்று அவர்களின் சந்தோஷத்தின் பொருட்டு உபேந்திர லோகத்தையே முதலில் அடைந்தார் என்கிறார்" என்று அவதாரிகை வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீபரமபதஸோபானத்தில் அர்ச்சிராதி பருவாவில் அயோத்யா வாசிகளின் முக்திக்ரமம் மதுவித்யா ந்யாயத்தாலே நிர்வகிக்கப்பட்டுள்ளது. ரகுவீரகத்யத்தில் இருக்கும் "ஸாகேத ஜனபத ஜனி தனிக" என்கிற வாக்கியத்தின் வ்யாக்யானத்தில் "அயோத்யாபுரவாசி ஜனங்கள் காரியவைகுண்டமான ஸந்தாந லோகத்தை யடைந்து அங்கே பக்தி யோகானுஷ்டானத்தாலே மோக்ஷமடைந்தார்கள் என்பது சம்ப்ரதாயம்" என்று இருக்கிறது. இக் க்ரந்தங்களால் ஸ்ரீராமன் சராசரங்களை கர்மயோகம் முதலிய உபாயமொன்றுமில்லாதிருக்கச் செய்தேயும் அயோத்யா வாஸத்தால் ஸந்தான லோகத்தையடைவித்தார். பிறகு அவைகள் அங்கிருந்து பிரம்மலோகம் சென்று பக்தி யோகத்தையனுஷ்டித்து பக்தியோகம் செய்த பிரம்மாவுடன் ப்ரளயத்தில் பரமபதத்தை யடைந்தன என்றேற்பட்டது. ஸ்ரீராமன் சராசரங்களை ஸந்தாந லோகத்தை யடைவித்தார். பரமபதத்தை யடைவிக்கவில்லை என்று திருவாய்மொழிக்கும் அவர் அவைகளை பரம பதத்தையே யடைவித்தார் ஸந்தாநலோகத்தை யடையவிக்கவில்லை என்று பெருமாள் திருமொழிக்கும் அபிப்ராய வர்ணனம் செய்தால் இரண்டிற்கும் விரோதம் வரும். ஆகையால் சராசரங்களுக்கு திருவாய்மொழியில் பரமபதப் ப்ராப்தியை முடிவாகக்கொண்ட ஸந்தாந லோகப் ப்ராப்தியும் பெருமாள் திருமொழியில் ஸந்தான லோகப் ப்ராப்தி பூர்வக பரமபத ப்ராப்தியும் விவக்ஷிதைகள் என்று சொல்லவேணும். இப்படிச் சொல்லுவதில் ப்ராப்யம் ஏக ரூபமாவதால் விரோதம் இல்லை. பெருமாள் திருமொழியில் வைகுந்த பதத்திற்கு காரிய வைகுண்டமான ஸந்தாந லோக மர்த்தம். இப்படிச்சொன்னால்ப்ராப்யம் இரண்டிலும் ஒன்றாவதால் விரோதம் இல்லை என்று சொல்லுவது சரியன்று. ஏனென்றால் "அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி" என்பதற்கு "இளைய பெருமாளோபாதி பரம பதத்திற்கு போகவிட்டு" என்று பெரிய வாச்சான் பிள்ளையால் வ்யாக்யானம் செய்யப்பட்டு இருக்கிறது. கீழ்ச் சொன்னபடி திருவாய்மொழி பாசுரம் பின் பாதியில் முக்திதானம் விவக்ஷிதமானதாலும் அதன்வ்யாக்யானமான திருவாராயிரப்படிக்கும் அதே தாத்பர்யமானதாலும் ஸந்தாந லோக ப்ராப்தியைக் காட்டிலும் மோக்ஷம் பிரதான பலமானதாலும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னவளி 85-வது ச்லோகத்தில் "ஸாகேதே முக்திதானுக் ஸ்திர சரஜனுஷாம்" என்று அருளிச் செய்யப் பட்டது. மோக்ஷபர்யந்த விவக்ஷை இருப்பதாலேயே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் அதிகாரி விபாகாதிகாரத்தில் நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன் என்பதை எடுத்துக்கொண்டு இவ்விடத்தில் பகவத் விஷய வாஸத்திற்கு மோக்ஷோபாயத்வம் சொல்லப்பட்டிருக்கிறதே என்கிற சங்கைக்கு சமாதானமாக அதற்கு ஒரு உபாயத்துவக்கு உண்டு என்றருளிச் செய்யப் பட்டது. இதனால் அர்ச்சிராத்யதி காரணதிகரண ஸாராவளி, ஸ்ரீபாதுகா ஸஹஸ்ராதிகார பரிக்ரஹ பத்ததி முதலியவையில் சராசரங்களுக்குச் சொல்லப்படும் மோக்ஷத்திற்கு பக்தி யோகானுஷ்டானம் காரணம் என்று ஸித்தித்தது. ஸ்ரீவரதராஜஸ்தவம், ஸ்ரீ அதிமானுஷஸ்தவம் இவைகளில் கர்மயோகம் முதலிய

உபாயமொன்றுமில்லாதிருக்கச் செய்தேயும் சராசரங்கள் அயோத்யா வாஸத்தாலே உம்மை அடைந்தார்கள். உம்மாலே பரம பதத்தை யடைவிக்கப்பட்டார்கள் என்று சொல்லியிருக்கிறது. இப்படிச் சொல்லுவதில் ஜ்ஞானத்தால் மோக்ஷம் என்கிற சித்தாந்தத்தோடு விரோதம் வருவதால் இவ்விடத்தில் கர்மயோகம் முதலிய உபாயம் ஒன்றையும் அனுஷ்டிக்காமல் பிரம்ம லோகத்தில் பக்தி யோகானுஷ்டானம் செய்தபிறகு உம்மை யடைந்தார்கள். உம்மாலே பரமபதத்தை யடைவிக்கப்பட்டார்கள் என்று அர்த்தம்கொள்ளவேணும். ஆகையால் ஆழ்வார்களுடைய ஸூக்திகளுக்கு ஒன்றுக்கொன்று விரோதமும் திருவாயமொழி அதன் வ்யாக்யானங்களோடு ஸ்ரீ தேசிக ஸூக்திகளுக்கு விரோதமும் இல்லை. இதன் விரிவு பிறகு.

குறிச்சியில் ஸ்ரீ அழகியசிங்கர்

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ஹூ உத்தராயணம் க்ரீஷ்ம ருது மிதுனமீ 1955ஹூ ஜுன்–ஜுலைமீ]

15–6–55	ஆனிமீ 1உ	புதன்கிழமை	மிதுநரவி-4-13, ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூந்யதிதி.
16-6-55	2உ	வியாழக்கிழமை	ஏகாதசிவ்ரதம்; சூந்யதிதி.
17–6–55	3உ	வெள்ளிக்கிழமை	மிதுநக்ருஷ்ணத்வாதசி திதி.
18–6-55	4உ	சனிக்கிழமை	த்ரயோதசி–சதுர்தசி திதித்வயம்.
19–6–55	5உ	ஞாயிற்றுக்கிழமை	அமாவாஸ்யை.
20–6–55	6உ	திங்கட்கிழமை	ப்ரதமைதிதி, சூர்யக்ரஹணம்.
30–6–55	16உ	வியாழக்கிழமை	ஏகாதசி; சயநஏகாதசி; ஸ்வாதி; பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்.
1–7–55	17உ	வெள்ளிக்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் 11-0.
2–7–55	18உ	சனிக்கிழமை	அனுஷம், நாதமுனிகள் திருநக்ஷத்ரம்.
4–7–55	20உ	திங்கட்கிழமை	பூர்ணிமை.
5–7–55	21உ	செவ்வாய்க்கிழமை	ப்ரதமைதிதி, சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்.
6–7–55	22உ	புதன்கிழமை	த்விதீயைதிதி.
7–7–55	23உ	வியாழக்கிழமை	த்ருதீயைதிதி.
8–7–55	24உ	வெள்ளிக்கிழமை	சதுர்த்தி திதி.
9–7–55	25உ	சனிக்கிழமை	பஞ்சமி திதி.
10–7–55	26உ	ஞாயிற்றுக்கிழமை	ஷஷ்டிதிதி,
14–7–55	30உ	வியாழக்கிழமை	தசமி திதி.
15–7–55	31உ	வெள்ளிக்கிழமை	ஏகாதசி திதி.
16–7-55	32உ	சனிக்கிழமை	ஏகாதசிவ்ரதம்; கடகரவி 40-51, தக்ஷிணாயன புண்யகாலம்; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்யதிதி.

[தக்ஷிணாயனம் க்ரீஷ்ம ருது கர்க்கடகமீ]

17-7–55	ஆடிமீ 1உ	ஞாயிற்றுக்கிழமை	சூன்யதிதி.
18-7-55	2உ	திங்கட்கிழமை	சூன்யதிதி; போதாயந அமாவாஸ்யை.
19-7-55	3உ	செவ்வாய்க்கிழமை	அமாவாஸ்யை
20-7-55	4உ	புதன்கிழமை	புஷ்யம்; 36-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
21-7-55	5உ	வியாழக்கிழமை	த்விதீயை - த்ருதீயை திதித்வயம்.
22-7–55	6உ	வெள்ளிக்கிழமை	சதுர்த்தி திதி.
23-7–55	7உ	சனிக்கிழமை	பூரம்; திருவாடிப்பூரம். ஸ்ரீ ஆண்டாள், 26-வது பட்டம் ஸ்ரீரங்கநாத யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
27–7–55	11உ	புதன்கிழமை	நவமி திதி; ஸ்வாதி; 25-வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
28-7–55	12உ	வியாழக்கிழமை	அதிதி.
30–7-55	14உ	சனிக்கிழமை	ஏகாதசி.

ஸ்ரீ:

அர்ச்சனையும் அதன் மொழியும்

ஆலயங்கள்தோறும் தொன்று தொட்டு நடந்துவரும் அர்ச்சனை விஷயத்தில் புதிய தோர் கிளர்ச்சிகிளம்பியுள்ளது. இப்பொழுது சிலயாண்டுகளாக சாஸ்திரங்கள் இசையாத பல புதிய முறைகள் வலுவில் புகுத்தப்பட்டு வருகின்றன. வலிகுன்றிய நாம் அவற்றைத் தகர்த்தெரிய ஆற்றலற்றவர்களாய் வாளா விருந்து வருகிறோம். இதைக்கண்ணுறும் சாமானியர்கள் இப்புதிய முறைகளும் சாஸ்திர ஸம்மதமானவைகளோவென்று ஐயுறு வர்கள். அவர்களைத் தெளிவிக்கவே உண்மைப் பொருளை விளக்குகின்றோம்.

அர்ச்சனையை வடமொழியிலேயே செய்ய வேண்டும் என்று கூறும் நாம் தென்மொழிப் பகைமையினால் அவ்வாறுகூறவில்லை என்பதை முதலில் உற்றுநோக்கவேண்டும்.

அடியவர்க்கு மெய்யனை திருமாலின் திருவருளைப்பெற பல மொழிகளிலும் துதிக்க லாம். திருமழிசையாழ்வாரின் இனிய தமிழ்ப் பாவைச் செவியுற்றபோதே தன் பைந்நாகப் பாயைச் சுருட்டிக்கொண்டு பின்தொடர்ந் ததை இன்றளவும் அறிவுறுத்த 'சொன்ன வண்ணம் செய்த பெருமான்' என்று திரு நாமந்தாங்கிநிற்கவில்லையா திருவின் மணாளன்? கபீர்தாஸ் துலுக்குமொழியில் துதித்து கடவுளின் கருணையைப்பெறவில்லையா? தியாக ராஜர் தெலுங்கில் தயரதன்மகனைத் துதித்து பெரு வாழ்வு பெறவில்லையா? இவ்வாறு பல படியாக பக்தர்கள் பலர் பல மொழிகளிலும் பகவானைப்பாடி பெரும் பேறு பெற்ற (ஐதிக் யங்களை) செய்திகளை ஐயமற அறிந்துள்ள யாம் வடமொழியிலேயே துதிக்கவேண்டும் என்று கனவிலும் கருதமாட்டோம்.

ஆயினும் அர்ச்சனை என்றுகொண்டால் அது வடமொழியிலேயே செய்யப்படவேண் டும். சாஸ்திரங்களில் 'ஜப, ஹோம, அர்ச் சனை' என்று இவ்வர்ச்சனையானது ஜப ஹோ மங்களுடனெருங்குசேர்த்துகூறப்பட்டுள்ளது ஜபமென்றால் மந்திரத்தை உச்சரிப்பதுதான். அம்மந்திரமும் வடமொழியில்தான் உள்ளது. தூய தமிழ் வழங்கும் சிவனடியார்களும் 'பஞ்சாக்ஷரீ' என்றே தம் மந்திரத்தை வடமொழியில் வழங்குகின்றனர். உச்சரிப்பும் வடமொழியிலேதான் அமைந்துள்ளது. 'ஹோமம்' என்பது மந்திரத்தை உச்சரித்து கொண்டேசெய்யப்படும் ஆகுதிப்பொருளின் தியாகந்தான். இஞ்ஞான்றும் ஹோமம் செய்ய விழையும் யாவரும் வடமொழிமந்திரங்களையே வழங்கிவருகின்றனர். இங்ஙனம், ஜபம், ஹோமம் இவ்விரண்டும் வடமொழியிலமைந்த மந்திரங்களாலேயே செய்யப்பட்டுவருகின்றன வென்பது தெள்ளெனப் பெற்றபின் அவை களுடன் படிக்கப்பட்ட அர்ச்சனைக்கும் முன் கூறியவழியே வழி என்பது கூறாமலே விளங்கும். ஆதலின் இவ்விஷயத்தில் புதிய தோர் முறையைக் கையாள்வது முற்றிலும் வேத ஆகமங்களுக்கு முரண்பட்டதாகவே யாகும். இவ்வாறு கூறுவது பிறபாஷைகள் கடவுளுக்குப் புரியாது என்றதனாலோ, தமிழ்த்வேஷத்தினாலோ அன்று. இருமொழிகளும் நமக்கு இரு கண்கள் போலவே இஞ்ஞான்றும் கருதப்பட்டு வருகின்றன.

இவ் வர்ச்சனைகளில் கையாளபபட்டுவரும் நாமாவளீ முதலில் மகாபாரதம் முதலிய இதி ஹாஸங்களில் காணப்படுகிறது. பாராயண

காலங்களில் இந் நாமாவளீ முதல் வேற்றுமை இறுதியாகவே படிக்கப்பட்டுவருகிறது. அர்ச்சனை காலங்களில் ஒவ்வொரு நாமாவுக்குப் முதலில் ப்ரணவமும், நாமாவினிறுதியில் நான்காம் வேற்றுமையையும், வாக்கியத்தினிறுதியில் 'நம:' என்ற சொல்லையும் சேர்த்தே இந்நாமாக்கள் வழங்கப்படவேண்டும். அப்பொழுதுதான் ஆகம விதிப்படி அர்ச்சனை செய்யப்பட்டதாகும். இதில் முதற்கண் சேர்க்கப்படும் ப்ரணவம் பிறபாஷைகளில்மொழிபெயர்க்கப்படுமாயின் பொருள் வறுமையெய்துவது திண்ணம். உதாரணமாக அரும்பொருள் பல செறிந்த ஒரு திருக்குறளையாயினும் பிறபாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டால் தமிழில் பொருள்படுமாறு பிற மொழிகளிலும் பொருள்படுமா? படாதல்லவா? கவிசக்கிரவர்த்தியினால் இய்ற்றப்பட்ட சாகுந்தலத்தின்கண் உள்ள பலவகைப்பொருள்கள் அடங்கிய சுலோகங்கள் பலவற்றிலும் ஒன்றையாவது அவ்வாறுய பெருமை குறையாது பிறபாஷைகளில் மொழிபெயர்ப்பதற்காகப் பல அறிஞர்கள் செய்துவரும் முயற்சி பூரண பயனை அளித்ததாகத்தெரியவில்லை. ஒருவாறுக மொழிபெயர்க்கப்பட்டிருப்பினும் வடமொழியினுல் உண்டாகுமின்பம் பிறமொழிகளினுல் உண்டாகாதென்பதே உண்மை. காவியங்களுடைய நிலையே இவ்வாறுயிருக்க மந்திரங்கள் விஷயத்தில் பிறமொழி வழங்கல் சிறிதளவும் பயன் படாது. இம்மந்திரங்களுக்குள்ள தனிப்பெருமையினுலல்லவோ இவற்றை (நித்யங்கள்) என்றும், 'செயற்கைப்பொருள்' அல்லனவென்றும் கூறுகின்ருேம். 'அவ்வோ மகரிஷிகளின்பெயரால்வழங்கப்படும் அவ்வோ மந்திரங்களும் அவ்வவமகரிஷகளால் உலகத்தவர்க்குப் ப்ரகாசப்படுத்தப் பட்டனவாதலால் அவ்வப்பெயர்பெற்றன' என்று நிறுவியுள்ளார்கள். இவ்வாறுய மந்திரங்களின்கண் உள்ள ஒவ்வொரு எழுத்திற்கும், உச்சரிப்புக்கும் அரும் பொருளும் பேராற்றலும் உண்டென சாஸ்திரங்கள் அறுதியிடுகின்றன.

மீமாம்சகர்களும் வேதமந்திரங்களைக் கொண்டு வேதம் வகுத்த செயல்களைச் செய்தால்தான் 'அபூர்வம்' (அத்ருஷ்டம்) என்ற ஓர் பயன் உண்டாகுமென்கின்றனர்.

இம்மந்திரங்களில் சில வேதங்களில் ஓதப்பட்டன. சில, மெய்ப்பொருளை உள்ளபடியுணர்ந்த மகரிஷிகளினுல் இயற்றப்பட்ட ஸ்மிருதி, இதிகாச, புராணங்களில் உள்ளன. சில ஆகமங்களிலும் உள்ளன. நமது சித்தாந்தத்தில் வேத, ஸ்மிருதி இதிகாச, புராணங்களுக்குப் ப்ராமாண்யத்தில் வாசியில்லை. ஆகம முறைப்படி பூஜைசெய்வதில் மேற்கூறிய விடங்களில் உள்ளமந்திரங்களைத்தான் கையாளவேண்டும்.

தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்று சொல்லுபவர் கூறும் காரணம் மிக விசித்திரமாயுள்ளது. அதாவது.— கடவுளை இசையாதாரும் தமிழில் அர்ச்சனை செய்தால் கடவுள் வழிபாட்டிற்கு விழைவர்கள். அப்படி விழையவிருக்குமவர்களை வடமொழியைக் காட்டி விரட்டவேண்டாம். ஆதலின் அவர்களையும் சேர்க்க அர்ச்சனைக்குத் தென்மொழியை வழங்கவேண்டும் என்று. கல்வி கற்காதவர்கள், என் கற்றவர்களிலும் மிதஜ்ஞானவர்கள் 'போற்றி' என்பதின் அர்த்தத்தையும் மற்ற பதங்களின் அர்த்தத்தையுமறியார்கள் என்பது நிச்சயம். வேண்டுமானுல் பரீக்ஷித்துப்பார்க்கலாம். இதற்கு என்ன காரணம் கூறுவார்களோ? மேற்கூறியவர்களை எப்படி சேர்ப்பது? பிறர்களின் மொழி விருப்பத்திற்

கேற்ப ஆலயங்களில் பாஷை புகுத்தப்படுமாயின் இன்ன பாஷையைத்தான் புகுத்தவேண்டும், இன்ன பாஷையைத்தான் தவிர்க்கவேண்டுமென்ற வரம்பை வற்றிவிடும். நம் தென்னாட்டில் பல பாஷைப்பேசும் மக்கள் மனம் ஒன்றி வாழ்ந்து வருகின்றனர். அவரவர்களுக்கும் தத்தம் மொழிகளில் அளவிலா விருப்பமிருப்பதும் கண்கூடு. அவ்வவமொழிகளில் துதிகளும் பல உள. ஆக அவர்களையும் நம் கடவுள் வழிபாட்டில் சேர்த்துக்கொள்ள அவரவர் மொழிகளிலும் அர்ச்சனை செய்யவேண்டிவரும். அதோடு மட்டும் நில்லாமல் ப்ரதிஷ்டை முதலியவற்றையும் பிறமொழிகளில் செய்ய முற்படவேண்டிவரும். ஆக ஒரு சாரார்க்கென ஒன்றைச் செய்யாது பொதுஜன ஆகமவிதிப்படி செய்வதே அனைத்துலகுக்கும் நன்மையாம்.

இக் கருத்தினாலேயே முன்பும், முன்னோர் ஆலயப்ரவேச சட்டத்தை எதிர்த்தனர். ஆனால் துணைவலியற்ற தொல்லோரின் தூய மொழிகள் அன்றும் இன்றும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அரசாட்சி வலியோர்களின் கையகத்ததாயின் ஆலயங்கள் முதலிய அறநிலயங்கள் அழிவது திண்ணம். முசமதியர்கள் காலத்தில் ஆலயங்கள் அழிக்கப்பட்டன. திருமாலின் திருவுடம்பு துணிக்கப்பட்டன. இப்படிப் பலவாறாக ஆலயங்கள் முதலியன சீர்கெட்டன. அதுபோல் இப்போதும் ஆட்சி வலியோர்கள் கையகத்ததாயிருக்கிறது. அவர்களும் அறப்பொருளை அறிகின்றிலர். அப்பொருளுரைக்கும் பெரியோர்களையும் புறக்கணிக்கின்றனர். இவ்வாறாய நிலையில் கைவலியற்ற நாம் செய்ய வடுப்பது யாது. ஆயினும் ஒன்றும் கூறுகின்றோம். வலியோர்கள் தம்வலிமையினாலெத்தகைய கொடுமைகளை இழைத்தாலும் உண்மைப் பொருள் ஒளியாது வாழ்ந்தே வரும். இது திண்ணம். இவ்வளவும் கடவுள், பூஜை, ஆகமங்கள், பரலோகம், பாபம், புண்ணியம் முதலிய நுண்ணிய விஷயங்களில் நம்பிக்கை யுள்ளவர்களைப் பற்றியே கூறினோம்.

ப்ரசங்கம் முதலியவற்றில் மேற்கூறிய விஷயங்களை மறுப்பவருங்கூட மறைமுகமாகத் தன் மனத்தகத்தே இருக்கும் மேற்கூறிய விஷயங்களின் நம்பிக்கையை அகற்ற ஆற்றாதவர்களாயிருக்கின்றனர். உதாரணமாக விவாஹ விஷயத்தில் தத்தம் மனத்திற்கேற்ப புதிய முரணிய முறைகளைச் சட்டமாக இயற்றுபவரும் கூட தங்கை, தமையன், தாய், தனயன் என்ற முறைகளை முறியடிக்காமல் போற்றிவருகின்றனர். இதை உற்று நோக்குங்கால் அவர்களுக்குப் பாவம் முதலியவற்றில் சிறிதளவு பயம், நம்பிக்கைகள் இருக்கின்றனவென்றே ஊகிக்க வேண்டியிருக்கிறது. ஆக ஆஸ்திகர்களனைவரும் இப்பொருளின் மெய்ம்மையை உணர்ந்து உற்றது ஆற்றக்கடவர் என்று ப்ரார்த்திக்கிறோம்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

श्रीमते श्रीवण्शठकोप श्रीवीरराघवशठकोपयतीन्द्र महादेशिकाय नमः

ஶுபகரமான உண்டன் ஸமர்ப்பித்த விஜ்ஞாபநம். ஸ்ரீ ஸந்நிதி நித்ய ததீயாராதந நாலாயிர வேதாந்த காலக்ஷேபாதி ஸமயங்களெல்லாம் ஆதனூரில் ஸுகமாய் நடந்துகொண்டுவருகின்றன.

ஸ்ரீ அஹோபிலமடம் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்வாமிஸன்னிதியில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ[illegible] ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் சாதுர்மாஸ்ய ஸங்கல்பமஹோத்ஸவம் நாளது மந்மத ௵ ஆனி ௴ 21 ௳ (5-7-55) செவ்வாய்க்கிழமை தினம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் க்ருபையை முன்னிட்டு நெடுந்தெரு அக்ரஹாரத்தில் நடத்துவதாக ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம்பத்தியாயிருக்கிறது. ஆஸ்திகர்களனைவரும் எழுந்தருளி ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும் ஸேவித்துக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கரின் அனுக்ரஹத்தையும் ஸ்ரீ[illegible]மந்த்ராக்ஷதைகளையும் பெற்றுக்கொள்ளவேணும்.

இந்தப்படி ஸ்ரீநியமனம்,

தையார், ஜோஸ்யம், மாடபூசி, வித்வான்,

ஸ்ரீ அஹோபிலமடம் ஆதனூர் } ரங்காசாரியர், ஸ்ரீஸன்னிதி ஸ்ரீகார்யம்.

குறிப்பு:— தனியாக பத்ரிகை அச்சிட்டு தனித்தனியாக ஒருவருக்கும் அனுப்ப ஏற்பாடாகவில்லை. இதன் மூலமாகவே எல்லோருக்கும் ஸங்கல்பமஹோத்ஸவம் நடக்கும் விஷயத்தைத் தெரியப்படுத்துகிறோம்.

Regd. No. M. 4437.

யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

ஹெட் ஆபீஸ். "யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்", சென்னை-1

250, 500, 750, 1000 ரூபாய்கள் வரை
வைத்தியப் பரீக்ஷை இல்லாமலே
பாலிஸிகள் வழங்கப்படுகின்றன.

1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு போனஸ் ரூ. 9

பிராவிடெண்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின்
* சரித்திரத்திலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது *

எங்கும் ஏஜண்டுகள் தேவை

எங்கள் ஏஜென்ஸி கௌரவம் வாய்ந்தது.
லாபகரமானது.
ஆர்வமுடைய இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல
சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

விபரத்திற்கு அடியில் கண்ட விலாஸத்திற்கு எழுதுக:

காரியதரிசி,
யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்
யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், சென்னை-1

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.